പുസ്തകം 24

ലക്കം 1 [illegible] 8


ജൂൺ 1951

JL
R34mm N51
N51.1.8.
182216

513

# பகுத்தறிவு

20 AUG 1951





அறிஞர். மார்ட்டின் லூதர்.

JL
R34 .N51
N51.1.8.
182314

17-8-1951. அணா 3

ஜுபிடர் பிக்சர்ஸ் &
சங்கீதா பிக்சர்ஸ்

தயாரிக்கும்

# ஜமீன்தார்

மகோன்னத தமிழ்ப் படம்.

கதை & வசனம் :
ப. கண்ணன்.

ஸ்டுடியோ :
சென்ட்ரல்.

★

விபரங்களுக்கு :

சங்கீதா பிக்சர்ஸ், 52, திருச்சி ரோட், கோயமுத்தூர்.

# பிரார்த்தனை

[ப. க. குஞ்சிதம்]

★

"அம்மா இங்கே வெளியில் வந்து பார். எல்லோரும், தண்ணீரை எடுத்து மேளதாளத்தோடு குதித்துக் கொண்டு போகிறார்கள். வந்துபாரேன்!" என்று கூப்பிட்டான் தமிழ்மணி. அவன் தாயாரும் வெளியே வந்தாள். பார்த்தாள். "தமிழ்மணி! இது மாரியம்மன் பண்டிகைக்கு சக்தி, சாமி அழைத்துச் செல்கிறார்கள்;" என்றாள். அம்மா! வெறுந் தண்ணீர் கூட பண்டிகையென்றால் சாமியாயிடுதே என்னம்மா! இந்தத்தண்ணீரிலேயா சாமிஇருக்கு என்று கேட்டான் தமிழ்மணி.

"படவா நாயே! நீயும் உங்கப்பா மாதிரிதானே இருப்பாய்; இருந்தாலும் இப்படிப் பேசாதே, இது தண்ணியல்ல. மாரியம்மனின் கணவன் கிணற்றில் இருக்கிறான். அவனைப் பண்டிகைக்கு அழைத்துச் செல்கிறார்கள்" என்றாள். "ஏம்மா! மாரியம்மன் கோயிலில் இடமில்லையா? அவள்கணவன் ஏன் கிணற்றிலே போய் இருக்கிறான்?" என்று கேட்டான். அவன் கேள்வியால் அம்மா திடுக்குற்றாள். யோசித்தாள். மாரியம்மனுக்கும், அவள் கணவனுக்கும் சண்டை வந்து கோபித்துக்கொண்டு போய்விட்டான்" என்றாள். "அடே! சாமியும் மனிதரைப் போல் சண்டை போட்டுக்குமா? அப்ப மனிதனும், சாமியும் ஒண்ணுதானா? என்றான். அம்மாவுக்கு தான் சொல்வதெற்கெல்லாம் மகன் கேள்வி கேட்பது சங்கடமாக இருந்தது. இருந்தாலும் சரியான பதில் சொல்லி அவனை நம்பவைக்க முயன்றாள்.

"தமிழ்மணி! உனக்கு விபரமாகச் சொன்னால்தான் தெரியும். ஆதியில் நடந்தது இது; ஒருநாள் மாரியம்மன் கணவனிடம் ஒரு காசு கொடுத்து, சந்தைக்கடையில் எல்லாசாமானும் வாங்கிவரச் சொன்னாள். ஆனால் மாரியம்மனின் கணவனுக்கு என்ன வாங்குகிறதென்று புரியவில்லை. திகைப்புடன் திரும்பிவந்தான். அப்போது மாரியம்மன் எண்ணெய் காய்ச்சிக் கொண்டிருந்தாள். கணவன் வெறும் கையுடன் திரும்பினதைக்கண்டாள். அவளுக்கு ஆத்திரம் கடல் அலையெனப் பொங்கியது. கொதிக்கும் எண்ணெயைத் தூக்கிக் கணவன் மேல் ஊற்றிவிட்டாள். எரிச்சல் தாங்காமல் அவன் கிணற்றில் போய் விழுந்து விட்டான்.

"மாரியம்மன் ஆத்திரத்தில் செய்ததற்கு, அவன் அப்படி பயந்து ஓடிவிட்டான். வேறு ஒன்றும் சண்டையில்லை" என்றாள் அம்மா. தமிழ்மணி சிறிது நேரம் யோசித்துக்கொண்டே நின்றான். அம்மா! நீயும் மாரியம்மன் நல்லவள் என்கிறாயே, ஒரு காசுக்குச் சாமான் வாங்கிவரச் சொல்வது, முடியாவிட்டால், அதற்காகக் கொதிக்கும் எண்ணெயைப்புருஷன் மேல் ஊற்றுவதா? இது கதையாக இருந்தாலும் நம்பமுடியாதே! இதுதான் மாரியம்மனின் வரலாறு? என்றான்.

இது உண்மையாகநடந்ததுதானாம்.

திருநீரும், சிவப்புக் குங்குமமும் சகல சமான்களுக்கும் ஈடு, எல்லாப் பெருமையும் உள்ளவை. இது அவனுக்குத் தெரியவில்லை என்றாள். "ஏம்மா! மாரியம்மன் விவரமாகச் சொல்லியிருந்தால் என்ன? இதுக்காகக் கொதிக்கும் எண்ணெயைக் கணவன் மேல் யாராவது ஊற்றுவார்களா? 'ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு' என்பதுபோல் தான் இருக்கிறது. இந்த மாரியம்மனைப் போய் சாமின்னு கும்பிடுகிறதா? இவளாலே நமக்கு என்ன பிரயோசனம்?" என்றான்.

"தமிழ்மணி! அப்படிச் சொல்லாதேடா. மாரியம்மனால்தான், முன்னொரு தடவை நீ பிழைத்தாய்; டாக்டரே நீ பிழைக்கிறது கடினம்னு சொன்னார். உங்கப்பா மனமிடிந்து உட்கார்ந்துவிட்டார். நீ பிழைத்து எழுந்தால், உருளுதண்டம் போட வைக்கறேன்னு மாரியம்மனிடம் பிரார்த்தனை வைத்துக் கொண்டேன், அந்த நிமிஷத்திலே இருந்து உனக்கு உடம்பு குணமடைந்தது. இப்ப நான் சொல்றபடி செய். அப்பாவும் நாளைக்கு சாயந்திரமாதான் வருவார். பக்கத்துவீட்டு பாலன் கூட உருளுதண்டம் போடப்போகிறானாம். நீ அவனுடன் மாரியம்மன் கோயிலுக்குப் போய், பிரார்த்தனையைச் செலுத்திவிட்டுவா" என்றாள்.

"ஓஹோ! இதுக்காகத்தான் நான் கேட்டதற்கெல்லாம், கடிந்துகொள்ளாமல் பதில் சொன்னாயோ! மாரியம்மன் ஒன்றும் என்னைக் காப்பாற்றவேண்டாம். நான் போய் சேற்றில் உருளமாட்டேன். தகப்பன் நாலடி பாய்ந்தால், மகன் எட்டடி பாய்வான் என்று எங்க வாத்தியார் சொல்லுவார். நீதானே பிரார்த்தனை வைத்துக்கொண்டாய்? நீயே உருண்டுவா" என்றான் தமிழ்மணி.

மகனின் துடுக்கான பேச்சைக் கேட்டு தாய் மனம் நொந்தாள். "அதிகப்பிரசங்கி! அவர்தான் மனம் வருந்த இப்படிப் பேசுகிறார் என்றால், எட்டடி பாயுமாம் குட்டிக் கழுதை! மரியாதையா நான்சொல்றபடி செய்யணும். இல்லே, சோத்துக்குத் தாளம் போடவேண்டியதுதான்" என்று மிரட்டினாள்.

தாயும், மகனும் பேசுவதைக்கேட்டுக்கொண்டே தெருவில் ஒரு கிழவர் நின்றிருந்தார். தமிழ்மணியின் முகத்தைப் பார்த்ததும், ஒருவித உணர்ச்சி அவரை அவனருகில் செல்லத் தூண்டியது; சென்றார்.

"அம்மா! பையனுக்கு விருப்பமில்லாத பிரார்த்தனையைச் செலுத்தாதீர்கள். தெய்வம் பெரிதல்ல, குழந்தைதான் முக்கியம்" என்றார். கோபத்துடனிருந்த தமிழ்மணியின் தாய்க்கு, அவர் பேச்சால் கோபம் பொங்கியது. "போதும்! நீ ஒன்றும் எங்கள் பேச்சில் குறுக்கிடாதே! வழியிலே போகிறவனுக்குப் பேச்சைப்பார்!" என்றாள் கடுகடுப்புடன். "அம்மா! கோபிக்காதீர்கள். என் வாழ்க்கையே எனக்குப் படிப்பினையாக அமைந்தது. அதைக் கேட்டால் கடவுள் என்று ஒன்று இருக்கவே முடியாது என்பீர்கள்" என்றார் அவர்.

"தாத்தா! உன் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்லேன்" என்றான் தமிழ்மணி. "ச்சீ! வாழ்க்கையாம், மண்ணும். அவனிடம் உனக்கென்ன பேச்சு? உள்ளே வா" என்று தாய் இழுத்துச் சென்றாள். தமிழ்மணி திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே சென்றான். ஏதோ ஒருவித பாசம் தமிழ்மணியையும், அந்தக் கிழவரையும் இணைத்தது. இருவர் பார்வையிலும் ஏக்கம் தோய்ந்திருந்தது.



அன்று இரவில்கூட அந்தக் கிழவரின் முகம் தமிழ்மணியின் முன் தோன்றிக்கொண்டே இருந்தது. ஏனோ அவர் சொல்வதைக் கேட்கவேண்டுமென்ற துடிப்பேற்பட்டது. அவர் நினைவாகவே இருந்தான். விடிந்தது. காலை உணவும் முடிந்தது. தமிழ்மணி வெளியில் வந்தான். அந்தக் கிழவர் தெருவில் நிற்பதைக் கண்டான். அவருக்கும் அவனைப் பார்க்காமல் இருப்புக் கொள்ளவில்லை. "தாத்தா! நேற்று என்னமோசொல்றேன்னீங்களே. சொல்கிறீர்களா?" என்றான். "தம்பி! நான் சொல்வது உனக்குப் புரியுமா?" என்றார்.

அவர் கண்களில் நீர் நிரம்பியது. "தாத்தா! ஏன் அழுகிறீர்கள்? வேறு இடத்திற்குப் போகலாம். இங்கிருந்தால் அம்மா பேசுவாள்" என்றான். சிறுவனின் அறிவைக்கண்டு வியந்தார். பிறகு அவரும் தமிழ்மணியும் ஒரு சத்திரத்திற்குள் சென்றனர்.

"தாத்தா! சொல்லுங்கள்" என்று துரிதப்படுத்தினான் தமிழ்மணி. கிழவர் சொன்னார்: "தம்பி! என் சொந்த ஊர் சேலம். நானும் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்தவன் தான். சேலம் மேட்டு மாரியம்மன் கோயில்கூட, நான் கட்டியதுதான். அந்தக்கோயிலில் நடக்கும் எந்தஉற்சவமும் நாளில்லாமல் நடைபெறாது. இந்த நெற்றியில் உள்ள கட்டான விபூதியைப் பார்ப்பவர்களுக்கே பக்தி உண்டாகும். எனக்கு ஒரே ஒரு பையன் இருந்தான். அவன் பேச்செல்லாம், நீ நேற்றுப்பேசினதுபோலவே இருக்கும். நான் எவ்வளவோ பக்தி மார்க்கத்தைச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. கோயில் உற்சவத்தின் போதெல்லாம், ஏன்? என்ன? எப்படி? எதற்கு? என்று கேட்டு என்னிடம் அடிபடுவான்.

ஒரு நாள் திடீரென்று அவனுக்குக் காய்ச்சல் வந்தது. நல்ல டாக்டரை அழைத்துவந்தேன். ஊசியும், மருந்தும் வேளை தவறாமல் கொடுத்து வந்தோம். திருப்பதியில் முடி இறக்குவதாகப் பிரார்த்தனை வைத்துக் கொண்டேன். அவன் உடம்பும் குணமடைந்தது. உடனே பிரார்த்தனை செலுத்தவேண்டுமென்றேன். ஆனால் என்மகன் சொன்னான்: "அப்பா! டாக்டர் எனக்கு எவ்வளவு மருந்து கொடுத்து ஊசி போட்டார்? அதெல்லாம் வீண்தானா? வெங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை வைத்ததால்தான் என் உடம்பு குணமடைந்ததா? டாக்டரை எதற்காக அழைத்துவந்தீர்கள்? யோசித்துப் பாருங்கள்" என்றான். என் மனைவியும் அப்பொழுது எட்டு மாத கர்ப்பிணி. "பையனின் உடம்பு பலவீனமாயிருக்கிறது. ரயில் பிரயாணம் தாங்காது. எனக்கும் உடம்பு சரியான நிலையிலில்லை" என்றாள். அவளும் புறப்பட மறுத்தாள். உடனே பிரார்த்தனையைச் செலுத்த வேண்டுமென்ற பிடிவாதத்தால் புறப்பட்டேன் எங்களுடன் பிரயாணத்திற்கு யாரையும் அழைத்துச் செல்ல

வில்லை. வெங்கடாசலபதியே துணை என்று என் மனைவி, மகனுடன் புறப்பட்டேன். திருப்பதிமலை ஏறும்போதே என் அன்பு மனைவி முகம் சுளித்தாள். 'கடவுள் காப்பாற்றுவார்' என்று ஆறுதல் கூறினேன்.

அவளை வசதியாக அழைத்துச் செல்லவும் நான் நினைக்கவில்லை. கஷ்டப்பட்டால்தான், கடவுள் அருளைப் பூரணமாகப் பெறமுடியுமென்று நம்பினேன். பாதிதூரம் போயிருப்போம். திடீரென்று என் மனைவி மயங்கிவிழுந்தாள். பதறினேன். பலருடைய உதவியுடன், நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு எடுத்து வந்தேன். ஆனால் அவள் விழுந்த அதிர்ச்சியில், வயிற்றில் இருந்த குழந்தை இறந்துவிட்டது. அதன் பயனாக அவளும் மடிந்தாள். 'தெய்வமே! உன் கிருபை இதுதானா?' என்று அலறினேன். அடித்துக் கொண்டேன். 'பட்டகாலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பது மெய்யாயிற்று. மறுநாள் என் மகனையும் காணவில்லை. எங்கோ போய்விட்டான். துக்கத்தை வெளியிடவும் சக்தியற்றவனானேன். பித்தனைப்போல் மகனைத் தேடியலைந்தேன்.

என் மகனின் உடல், ஒரு பாழடைந்த கிணற்றில் மிதப்பதைக் கண்டேன். அவன் அணிந்திருந்த நகைகளுக்கு ஆசைப்பட்டு, எவனோ அப்படிச் செய்திருக்கிறான். அயலூரில் மனைவியையும் மகனையும் இழந்து கதறினேன். கடவுள் என்நிலையைக் கவனித்தாரில்லை. மடமையால் மனைவி மக்களை இழந்தேன். ஊர் திரும்ப மனமில்லை. பரதேசிபோலானேன். பிச்சைக்காரனாக அலைகிறேன் பதினைந்து வருடமாக! நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்தேன்.

நான் திருப்பதிக்குப் போகும் பொழுது, சேலத்தில என் ஒரே தம்பி மணம் முடிக்கும் பருவத்திலிருந்தான். அவனிடம் மாறாத அன்புகொண்டிருந்தேன். அவனைக் காணவேண்டுமென்றும், அவன் குழந்தை குட்டிகளையாவது காணவேண்டுமென்றும் ஆவலுண்டாகிறது. பிச்சைக் கோலத்துடன் அவனைச் சென்று பார்ப்பதா என்று அஞ்சுகிறேன்" என்று முடித்தார் அவர். அவர் கண்களில் தாரை தாரையாக ஒழுகியது கண்ணீர். குழந்தைபோல் தேம்பினார்.

தமிழ்மணியும் அழுதேவிட்டான். ஏதோ அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. "உங்க தம்பியின் பெயர் என்ன? உங்க பெயர் என்ன?" என்று கேட்டான். "அவன் பெயர் அன்பானந்தம், என் பெயர் உத்தமலிங்கம்" என்றார். "எங்க அப்பா பெயர், அன்பானந்தம் தான். எங்க சொந்த ஊரும் சேலந்தான். இந்த ஊரில் அப்பா உத்தியோகம் பார்க்கிறார். நீங்கள் என் பெரியப்பாவேதான்! அப்பாவும் சொல்வார்: அண்ணா' பிரார்த்தனை செலுத்தப் போனவர்தான் அப்படியே போய்விட்டார். பாழும் சாமியும், வேண்டாம் பிரார்த்தனையும் வேண்டாம் என்று, அடிக்கடி சொல்லிக்கொண்டு. வருத்தப்படுவார். வீட்டுக்குப் போகலாம் வாருங்கள்' என்றான் தமிழ்மணி. கிழவர் பேராச்சரியமடைந்தார். நீ என் தம்பியின் மகனா?" என்று தமிழ்


## அண்ணாவின் புதிய புத்தகங்கள்.

★

| | |
|---|---|
| யோகிவேமன்னா | 0-4-0 |
| நடிப்புக் கலைச்செல்வம் | 0-4-0 |
| காதல் சித்திரங்கள் | 0-6-0 |
| மக்கள் கவிஞர் | 0-3-0 |

### டி. கே. சீனிவாசன்.

| | |
|---|---|
| துன்பக் கதை | 0-8-0 |
| எல்லைக்கப்பால் | 0-8-0 |

### நா. அறிவழகன் தீட்டிய

| | |
|---|---|
| இன்பத்தின் எல்லை | 1-0-0 |

### ரா. தனாலன் எழுதியவை:

| | |
|---|---|
| நடிகன் | 0-8-0 |
| லீலாராணி | 0-8-0 |

---

| | |
|---|---|
| கருணாநிதி கருத்துரைகள் | 0-3-0 |

---

### ஆசைத்தம்பியின் நூல்கள்:

| | |
|---|---|
| வரண்ட வாழ்க்கை | 0-8-0 |
| ஆண்களை நம்பலாமா? | 0-3-0 |
| முத்துக் குவியல் | 0-3-0 |
| நாம் இருவர் | 0-3-0 |
| வியர்வை விருந்து | 0-6-0 |

விற்பனைக் கழிவு 25%
அனுப்பும் செலவு இறும்.

கிடைக்குமிடம்:

**எம். சூரி,**
**14-ஏ, குப்பையர் தெரு,**
**சென்னை—1.**



# பகுத்தறிவு

ஆசிரியர்:
ப. கண்ணன்.

வள்ளுவராண்டு 1982 திங்கள் 8.

மலர் 1 | கர-ஆவணி | இதழ் 8


## பொருளடக்கம்.


| | |
|---|---|
| தீக்கு வெளுத்ததடா "புதுமைவாணன்" ... | 2 |
| தேவி—ஒரு களங்கம் ... | 3 |
| நடப்பும் கருத்தும் ... | 5 |
| நமது தொண்டுக்கு ஆதரவு ... | 6 |
| இலிங்கக் கடவுளின் தோற்றம் ... பாவலர். வேலாயுதசாமி | 7 |
| தெளிவு பெறவேண்டும் ... சிந்தனையாளன் | 9 |
| சமுதாய விடுதலை (இங்கர்சால்) மொழி பெயர்ப்பு: இரா. நெடுஞ்செழியன் M.A, | 14 |
| பொன்மொழிகள் ... | 20 |
| பிரார்த்தனை (சிறு கதை) ... ப. க. குஞ்சிதம் | 21 |
| ஆசியாவும் மேலைநாடுகளும் மதமும் (ஆல்ப்ரோ மேன்ஃகாட்டன்) மொழி பெயர்ப்பு: சேலம் எம். சீதாராமன். | 26 |
| அறிஞர் மார்ட்டின் லூதர் ... ப சிவப்பிரகாசம் B. A. | 31 |
| சிரிக்காதே! | 34 |
| வாழத் தகுதியற்றவன் (சிறுகதை) மா: முத்துசாமி | 35 |
| கருத்துரை ... | 40 |


★

# திக்கு வெளுத்ததடா!

"புதுமைவாணன்"

1 திக்கு வெளுத்த தடா — தோழா
செங்கதிர் தோன்றுதடா!
துக்க நிறை வாழ்வில் — ஒரு
சோதி துலங்கு தடா!

2 நெற்றி வியர்வைவிழ — உழைத்த
நீண்ட பொரு ளெல்லாம்
சுற்றி யோர் கொண்டு செல்ல — இங்கு
தூங்குவ தேனோ வடா!

3 ஏவும் நுகத் தடியில் — உழைக்க நீ
ஏற்ற விலங்கோ வடா!
சாவு வரு முன்னர் — உனக்கு
சாந்திதான் கிட்டு மோடா!

4 ஆசைக் கன வெல்லாம் — நீயிங்கு
அடையக் கூடு மோடா!
நாசமாய்ப் போவ தல்லால் — இங்கு
நனவில் சேரு மோடா!

5 உனது சந்ததிகள் — நாட்டிலே
உயர்வை எய்து மோடா!
கனவுக் காட்சியல்லால் — வேறு
கதியும் உண்டோ வடா!

6 உழைத்துச் செத்தவரின் — இரத்தம்
உறைந்த பூமியடா!
புழுதி மண்ணெல்லாம் — அவர்
புலப்பம் சொல்லு மடா!

7 இரக்க மற்ற தோரு — வர்க்கம்
இரும்பு நெஞ்சேற்று
செருக்குக் கொண்டதடா — உழைப்பைத்
திருடி நின்ற தடா!

கதிர் ஒளியினிலே — சபதக்
கவசம் பூண்டிடடா!
அதிர் வின்றியே நீ — கடமை
ஆற்ற முனைவாயடா!

182314

-600 008

பகுத்தறிவு

# தேவி - ஒரு களங்கம்.

ஜனநாயகம், குடியரசு, மக்களாட்சி, என்ற சொற்கள், மனித அறிவின்-நாகரிகத்தின்-வளர்ச்சியிலே முளைத்தவை. வெறும் சொற்கள் மட்டுமல்ல, அவற்றின் பின்னால் உன்னதமான தத்துவம், மனித உரிமையின் பெருமை, அறிவின் மதிப்பு, பொது வாழ்க்கையின் புனிதம் யாவும் தோளுயர்த்தி நிற்கின்றன. குடியாட்சி முறை நிலைப்பதற்காக மேலைநாட்டறிஞர்கள், மக்கள், செய்துள்ள தியாகங்கள் எண்ணிலடங்கா. அதன்பயனாக மேலைநாட்டார் இன்று பெற்றுள்ள முன்னேற்றமும் எண்ணிலடங்காதவை.

மாற்றுக் கருத்துகளுக்கும், கட்சிகளுக்கும் மதிப்புத் தருபவரே உண்மைக் குடியரசுவாதிகளாக இருக்கமுடியும். நாட்டிலே வேறு கருத்துக்கூடாது, கொள்கைகூடாது, பத்திரிகைகள், பிரசுரங்கள், புத்தகங்கள்கூடாது, நாடகம் நடிக்கக்கூடாது, மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் நடத்தக்கூடாது என்று நினைப்பவர்கள், சர்வாதிகார மனப்பான்மையில் வளர்ந்தவர்கள்; ஆளும் வெறிபிடித்தவர்கள்; நாட்டிற்கே கேடு சூழ்பவர்களாவர். இத்தகையோரால் நாட்டிலே கருத்துவளம் குறைந்து, மனித சக்தி மதிப்பிழந்து, அறிவும், அரசியல் முறைகளும் வலிவிழந்து நாட்டு முன்னேற்றம் சீர் குலைந்துவிடும்.

இதனைக் கருத்தில் கொண்டே இந்தியக் குடியரசுச் சட்டம் வகுத்தவாகள், அதன் பூர்வபீடிகையில், குடிமக்கள் அனைவர்க்கும் சிந்தனை, பேச்சு, எழுத்து ஆகியவற்றில் சுதந்திரம வழங்கியுள்ளார்கள். அந்தச் சட்டத்தின்கீழ் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளவர்கள், அதற்கு மாறுபட்ட முறையிலே, சர்வாதிகாரப் போக்கில் நடந்துகொள்வது அந்தச் சட்டத்தையே அவமதிப்பதாகும்.

இன்று நாட்டை ஆளுபவர் காங்கரஸ் கட்சியினர் என்றாலும், அவர்கள் மக்களின் நலன், வாழ்வு, உரிமை, வளம், இவற்றிற்குப் பொறுப்பாளிகளே ஒழிய, காங்கிரஸ் கட்சியின வாழ்வுக்குப் பொறுப்பாளிகள் அல்ல. இருந்தும், காங்கிரஸ் கட்சிதான் முக்கியம் என்ற முறையில் ஆட்சியினரின் செயல்கள் நிகழ்கின்றன.

ஜூலை மாதம் 4-ம் நாள், தேனீயில் நடந்த பயங்கரக் கலவரம், உரிமை வாழ்வில், குடியரசுக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ள அறிஞர்கள் பலரைச் சிந்திக்கவைத்துள்ளது.

போலீஸ் அனுமதியோடு, போலீஸ் குறிப்பிட்ட நேரத்திற்கும் இணங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியாக நடத்திய கூட்டத்தை, காங்கிரஸ்காரர்கள் முன்னேற்பாட்டோடு வந்து, பலாத்காரமாகக் கலைத்திருக்கிறார்கள். கத்தி, கம்பு, கல், அரிவாள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. பல பேர்க்கு அடி, குத்து, காயம்! கலவரம் செய்தவர்கள் என்ற முறையிலே கைது செய்யப்பட்ட பல காங்கிரஸ்காரர்கள், காங்கிரஸ் தலைவரின் தலையீட்டின்மேல் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஒரு சப் மாஜிஸ்திரேட் உள்பட "சஸ்பெண்ட்" செய்யப்பட்டார்கள் என்றும், பலவகையான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

மாற்றுக் கட்சியினர் கூட்டம் நடத்தினால் காங்கிரஸ் கட்சியின் பலம் குறைந்துவிடும், மக்களின் ஆதரவை இழந்துவிடும், தேர்தலில் வெற்றிபெற முடியாது, என்பன போன்ற அச்சம் காலித்தனமாக உருவெடுத்து, பிற கட்சியின் பேச்சுரிமையைப் பறிக்க-நசுக்க-கீழ்த்தரமாக முயல்வது அடாத செயல் மறைமுகமாக, நம் கட்சி என்ற முறையில்-இதனை ஆதரிப்பது போல் ஆளவந்தார்கள் நடந்துகொள்வது, குடியரசுக் கோட்பாடுகளுக்கும், ஆட்சி முறைக்கும் ஒரு களங்கமாகும்.

வளர்ந்துவரும் குடியாட்சி முறையை, அரசியலறிவை, பொறுப்புணர்ச்சியை முன்னிட்டு, தேனீ நிகழ்ச்சியை பகிரங்கமாக விசாரணை நடத்தி நீதிவழங்க வேண்டுமென்று கோருகிறோம்.

# நடப்பும் கருத்தும்

## நல்ல தீர்ப்பு.

பழைமையான பழக்க வழக்கங்கள் என்பதற்காக, கண்மூடித்தனமாக எதையும் ஒப்புக்கொள்ளலாகாது என்று நாம் சொல்லுகிறோம். வைதிகம் முறைத்துப் பார்க்கிறது.

"இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சி, யூதர் ஆகியோரின் புராதன பழக்க வழக்கங்கள், நீதியின் நலன் கருதி, நீதிசபைக்கு நியாயமாகவோ, அவசியமாகவோ தோன்றினாலொழிய, அவை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக அங்கீகரிக்கப்படமாட்டா" என்று அண்மையில் சென்னை உயர் நீதிமன்றம், வழக்கொன்றில் தீர்ப்பளித்துள்ளது.

கணவனை இழந்த ஒரு விதவைப் பெண் சாட்சியம் சொல்ல வழக்கு மன்றம் வர மறுத்தாள். அதற்கு அவள் சொன்ன காரணம்: என் கணவர் இறந்து ஓராண்டு முடியாமல் வெளியே வருவது எங்கள் சாதி வழக்கமில்லை என்பது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி திரு. ஏ. எஸ். பி. ஐயர் அளித்துள்ளார் இத்தீர்ப்பை. பாராட்டுகிறோம். பழைமையைக்காட்டி பயமுறுத்தும் பத்தாம் பசலிகளின் சிந்தனைக்கு இச்செய்தியை சமர்ப்பிக்கின்றோம்.

## கூட்டுப் பண்ணைகள்.

"உணவுப் பெருக்க இயக்கம் வெற்றி பெறுவதில், உண்மையிலேயே நமக்கு ஆர்வம் இருக்குமானால், சோவியத் யூனியனில் இருப்பதைப்போன்ற கூட்டுப்பண்ணை முறையை நாமும் கடைப்பிடிக்க வேண்டும்" சோவியத் சமதர்மக் குடியரசு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துமுடித்த டாக்டர். ஜே. ஜே. சினாய் இவ்வாறு கூறுகிறார். டெல்லி பல்கலைக் கழகத்தின் தாவர நூல் வல்லுனரான இவர், அந்நிய நாட்டு விஞ்ஞான, கலாச்சாரத் தொடர்பின் பொருட்டு ரஷியாவுக்குச் சென்றவர், நம் நாட்டு விவசாய அபிவிருத்தி திட்டக் குழுவுக்கு விரிவான அறிக்கை யொன்றும் கொடுத்திருக்கிறார். இந்த ராமராஜ்ய சர்க்காரில் அது எவ்வளவுக்குப் பயன்படுத்தப்படுகிறதோ தெரியவில்லை.

உணவுப் பொருள் உற்பத்தியில் ஊக்கமும், தக்க மாற்றமும் இல்லாமல், பழையபாதையிலேயே சென்றுகொண்டிருக்கும் விவசாயிகளிடம் புத்துணர்ச்சி ஏற்படுத்தவேண்டும், கூட்டுப்பண்ணைகள் நிறுவப் போதிய பணமும், புதிய விவசாயக் கருவிகளும், கொடுத்துதவி, குடியானவனுக்குப் புதிய ஊக்கமும், நம்பிக்கையும் உண்டாக்கவேண்டும். உழைப்பவன் பலன் துய்க்க வழிகோலவேண்டும். மற்ற நாடுகளைப் பின்பற்றிப் புதிய முறையில் உற்பத்தியைப் பெருக்கினாலன்றி, நமது உழவுத் தொழில் முன்னேறவும், உணவுப் பஞ்சம் தீரவும் வழியில்லை. டாக்டர் சினாயின் அறிக்கைப்படி, இந்திய அரசாங்கம் கூட்டுப் பண்ணைகளைத் தோற்றுவிக்கப் பின் வாங்கினாலும், பஞ்சம் பட்டினியில் சிக்கித் தவிக்கும் நமது மக்கள் நலனைக் கருதி, சென்னை அரசாங்கமாவது இம்முயற்சியை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

# நமது தொண்டுக்கு ஆதரவு.

ஒரு பத்திரிகை நடத்துவதிலே எத்தகைய சங்கடங்கள், துன்பங்கள் குறுக்கிட்டாலும், "அந்தப் பத்திரிகை ஒரு பயனுள்ள தொண்டுபுரிகிறது, அது நாட்டுக்குத் தேவைதான்" என்று மக்களும், அறிஞர்களும் பாராட்டும் பொழுது, அந்தச் சங்கடங்களும், துன்பங்களும் வெகு எளிதாகப் போய்விடுகின்றன. எது வரினும் ஏற்போம் என்ற துணிவும், உற்சாகமும் பிறக்கின்றன.

* * *

18—12—1949 ல் இந்தியப் பகுத்தறிவாளர் மாநாடு ஒன்று சென்னையிலே சிறப்பாக நடைபெற்றது சாவதேசப் பகுத்தறிவாளரில் ஒருவராகிய பூனா சர். ஆர். பி. பராஞ்சிபை **M. A., (CONTAB) D. SC.** தலைமை வகித்து, அரிய சொற்பொழிவாற்றினார். மாநாட்டில் **"இந்தியப் பகுத்தறிவாளர் கழகம்"** ஒன்று நிறுவப்பட்டது. இந்தியா முழுமைக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த செயற்குழு அமைக்கப்பட்டது இயன்ற வழியெல்லாம் பகுத்தறிவுப் பணி புரிவது கழகத்தின் குறிக்கோள்.

**தலைவர்**; சர். ஆர். பி. பராஞ்சிபை, **துணைத் தலைவர்கள்**; பம்பாய், பேராசிரியர் கே. டி. ஷா. திரு. எம். என். ராய், சென்னை திரு. எஸ். இராமநாதன், **செயலாளர்கள்**; சென்னை திரு. எஸ். கோஷ், திரு. ஏ. எஸ். செல்வராஜ், இப்படியாக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயற்குழுவில் தமிழ் நாட்டுத் தலைவர்கள், திரு. ஊ. பு. அ. சவுந்திரபாண்டியன், அறிஞர். சி. என். அண்ணாத்துரை, அறிஞர். கா. அப்பாத்துரை, திரு. க. அன்பழகன், திருமதி. சத்தியவாணிமுத்து ஆகியோர் இருக்கின்றனர். மற்றும் மலையாள, கன்னட, ஆந்திர நாட்டு அறிஞர்கள் பலரும், இந்திய உபகண்டத்தின் பிரதான பகுத்தறிவாளர்களும் இதிலே இடம் பெற்றுள்ளனர்.

பகுத்தறிவுப் பிரச்சினைகள்பற்றி ஆய்வுரைக் கூட்டங்கள் நடத்துகின்றது. நூல்கள் வெளியிட்டு வருகின்றது. இது அடிப்படையான வேலைகளை அமைதியாகச் செய்துவரும் அரிய நிறுவனமாகும்.

* * *

இந்தியப் பகுத்தறிவாளர் கழகத்தின், (சென்னை) 23-7-51 கூட்டத்தில் நிறைவேற்றியுள்ள தீர்மானம் இது:

**இக்கழகம், திரு. ப. கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, பகுத்தறிவு வளர்ச்சிக்கென வெளிவரும் 'பகுத்தறிவு' என்ற தமிழ் மாதப் பத்திரிகையை முழு மனதோடு வரவேற்பதோடு, பகுத்தறிவாளர்கள் யாவரும் இப் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகியும், கட்டுரைகள் அனுப்பியும் ஆதரிக்கவேண்டுகிறது**

* * *

மக்களின் சிந்தனையைத் தூண்டி பகுத்தறிவை வளர்க்கும் நமது தொண்டிற்குப் பேராதரவு காட்டியுள்ள, இந்தியப் பகுத்தறிவாளர் கழகத்தின் பொறுப்பாளர்க்கு, மகிழ்வு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—**ஆசிரியர்**

# இலிங்கக் கடவுளின் தோற்றம்.

[பாவலர். தொ. ப. வேலாயுதசாமி.]

(1) விரதமாய் உனதின்ப மனைவியோடும்
மெய்யன்புக் குழந்தைகளினோடும் சென்று,
பரமனே பாவத்தைத் தீர்ப்பாயென்று
பக்தியுடன் துதிபாடிப் பணியும் அந்த
உரலிலே குழவிக்கல் போட்ட தைப்போல்
உள்ளதொரு வடிவமாம் சிவலிங் கத்தின்
வரலாறு தெரிந்தால் நீ அதை வணங்கும்
மதிகெட்ட செயலிலே இறங்கமாட்டாய்.

(2) சிவனென்னுங் காமுகனும் அரியும் ஓர்நாள்
சென்றனராம் தாருகா வனத்தை நோக்கி,
தவநிலைகொள் முனிவர்தமைக் கெடுப்பதற்குத்
தக்கதொரு பெண்ணாகி விஷ்ணு சென்றான்.
அவமுடைய அம்மணமாய் மானமின்றி
அம்முனிவர் மனைவியரை யணைவதற்குப்
பவமகல வழிகாட்டும் பரமன் போனான்.
பாரந்த இழிசெயலின் அலங்கோலத்தை!

(3) அதுதெரிந்த முனிவர்சினம் பொங்கி யீசன்
ஆண்குறிதான் அற்றுவிழச் சாபமிட்டார்,
விதமுணர்ந்து மாயன் அது கீழ்விழுந்தால்
விபரீத மாகுமென மல்லாந்திட்டுப்
பதியவைத்தான் தனதொரு பெண்குறியி
னுள்ளே!
பரிகாசம் செய்தெவரும் சிரிக்குங்கொச்சைக்
கதையிதுவே போதமிவர் பண்பைக் காட்ட!
கண்ணாடி தேவையுண்டோ கைப்புண்
பார்க்க?

(4) இன்னுமொரு விதமாக எழுதி வைத்த
இலிங்கத்தின் உற்பத்திக் கதையைக்
கேட்பாய்.

தன்னையறி யத்தானே தனிமையாகத்
தவம்புரிந்த முனிவனிருப் பிடத்தி னேரம்,
மன்னுமொரு புதர்மறைவில் அரனும் மாலும்
மட்டில்லாப் பெருங்காம வெறிய ராகி,
மின்னலிடைப் பெண்ணுருவம் விஷ்ணு கொள்ள,
விரும்பியின்பம் அநுபவித்தார்
இரண்டுபேரும்!

(5) அருகினிலே எழுந்திட்ட ஓசையாலே
அம்முனிவன் தவங்கலைந்து சென்று
பார்த்தான்,

இருவருமங் கிருந்திட்ட நிலையைக் கண்டான்,
எரிந்துமனங் கொதித்தான்; என்
இருக்கைப் பக்கம்

மருவியதால் உங்களுயிர்க் குறிக ளற்று
மண்ணில்விழக் கடவதெனச் சாபமிட்டான்.
உருவமொன்று யொட்டிக்கீழ் விழுந்ததாம் அவ்
வூழல்மய மேஇலிங்கம் உணரப் பாரீ.

(6) பெண்குறியும் ஆண்குறியும் ஒன்று சேர்ந்த
பெருங்காட்சி யுருவமதைக் கடவு ளென்று
கண்குளிரக் காணுவதோ! பூசை செய்து
காணிக்கைச் செலுத்துவதோ,
சிவனே யென்று

பண்குழையப் பாடுவதோ! நம்மை யெல்லாம்
பைத்தியத்தின் தோழர்களாய்; மூளையின்றி
மண்புகுந்த மண்டைகளாய் எண்ணி யன்றே
வஞ்சவழி வகுத்தார்கள் ஆரியர்கள்!

# தெளிவு பெறவேண்டும்.

[சிந்தனையாளன்]

கொலை, கொள்ளை, அநீதி, கொடுமை, மிருகத்தனம், களவு, சூது, வஞ்சகம், விபசாரம், சுரண்டல் இவைகள் எப்போதாவது இல்லாமல் இருந்தனவா? வரலாற்றுக் காலத்திற்கு முன்பும், இயற்கை நமக்குக்காட்டும் மனித வரலாற்றையும், மனிதன் ஆராய்ந்து கண்ட மனித வரலாற்றையும் முன்வைத்து, இன்றுவரை இம்மாறுபட்ட உணர்ச்சிகளை ஒழிக்க முயன்ற அரசர்கள், சான்றோர்கள், ஞானிகள், மகான்கள், ஒழுக்க சீலர்கள் எத்தனை பேர்கள்?

செங்கிஸ்கான் (மங்கோலிய மன்னன்) முதல், நம் கண்ணெதிரில் வாழ்ந்த காந்தியார் ஈறாக, இவர்களுக்கு இடையிலிருந்தவர்கள்; எத்தனையோ புண்ணிய சீலர்கள், தீரர்கள், வீரர்களாலாவது அழிக்கமுடிந்ததா? 'இல்லை,' "முடியவில்லை," என்றுதான் உலகானுபவமும், பகுத்தறிவுமுள்ளவர்கள் கூறுவார்கள். இதற்கு நாம் வாழும் இக்காலமே சான்று பகரும்.

இந்து மதம் ஏற்பட்டு, 196 கோடி 8 லட்சத்து 56 ஆயிரத்து 976 ஆண்டுகளாகியும், (இது தயானந்த சரஸ்வதி அவர்களால் கணிக்கப்பட்டது. இதற்கு அவர் நான்கு வேதங்களையும், நான்கு ஸ்மிருதிகளையும் சான்று காட்டுகிறார்.) புத்தமதம் ஏற்பட்டு, 2469 ஆண்டுகளாகியும், மகமதிய மதம் ஏற்பட்டு 1369 ஆண்டுகளாகியும், கிருத்துவ மதம் ஏற்பட்டு 1951 ஆண்டுகளாகியும், மனிதனை மிருகமாக்கும் இவ்வுணர்ச்சிகளை, மறையை வகுத்தவராலும், அறத்தை வளர்த்தவராலும் அழிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இச் சமயங்கள் ஏற்பட்டதன் நோக்கம்; மனிதனிடம் இருக்கும் மேற்கண்ட மாறுபட்ட உணர்ச்சிகளை அழித்து, அல்லது குறைத்து, மனிதத் தன்மையை, பண்பை மிளிரவைத்து, வாழும் வகையறிந்து வாழவைக்கத்தான் என்று, இச்சமயங்களை தோற்றுவித்தவர்களே கூறினர்கள் என்பது ஆராய்ந்துபார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும். கடவுள் தூதவர்கள், அநுபூதிபெற்ற மகான்கள், அவதாரங்கள், ஆழ்

வார்கள், நாயன்மார்களால் இகழப்பட்ட, மனித உணர்ச்சிகளாகிய கோபம், சிடுசிடுப்பு, பொருமை, பொச்செரிப்பு, கோழைத்தனம், பயம், அச்சம் இன்னோரன்னவைகளை மனிதன் மனதிலிருந்து அழிக்கமுடிந்ததா? அதே போல் அன்பு, ஆசை, இரக்கம், அருள், தயாளம், கொடை, காதல், கனிவு இன்னோரன்னவைகளை வளர்க்க முடிந்ததா? யாராலும் முடியவில்லை. இதற்கு நம் கண்ணெதிரில் நடந்துவரும் மனிதவாழ்க்கை நடைமுறைகளே சான்று. ஆனால் இயற்கையில் பருவ காலங்கள் மாறி மாறி வருவது போல், மனித வாழ்க்கையிலும் சில காலம் மிருகத்தன்மையும், சில காலம் அருள் தன்மையும், தனி மனிதனை-சமுதாயத்தை-ஆட்சி புரிந்திருக்கின்றன.

மனிதப் பண்புக்கு மாறுபட்ட உணர்ச்சிகளை ஒழிக்க முயன்ற ஞானிகள், சமயத் தலைவர்கள், மறைமுதல்வர்கள், அரசர்கள் அத்தனை பேரும் மாண்டு மறைந்தார்கள். ஆனால் அவர்கள் எது எது மனிதனிடம் இருக்கக் கூடாது, எது எது இருக்க வேண்டும் என்று கூறினார்களோ; அவைகள் இன்று மனிதரிடையே இருப்பதையும், செயலாற்றுவதையும் காண்கிறோம். காரணம், அவைகள் இயற்கை. இயற்கையை மனிதர் மனவலிமையால் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்ளலாமே ஒழிய; அதை முற்றிலும் அழித்துவிடமுடியாது. முயன்றவர்கள்தான் அழிந்தனர். அழிவார்.

முற்றிலும் மிருகத்தன்மை அழிந்துவிட்ட மனிதனையோ, முற்றிலும் அருள்தன்மை அழிந்துவிட்ட மனிதனையோ; குகைகளில் வாழ்ந்த மனிதனிலிருந்து, இன்றைய மனிதன் வரை காணக் கிடைக்கவில்லை.

மிருகத் தன்மை அழிந்தால், அருள் தன்மைக்கு வேலையில்லை, அருள்தன்மை அழிந்தால், மிருகத் தன்மைக்கு வேலையில்லை. ஒன்று “நெகட்டிவ்,” மற்றொன்று “பாசிட்டிவ்” இரண்டும் சேர்ந்தால்தான் மனிதவாழ்க்கை ஒளி வீசும். எனவேதான் இந்த மாறுபட்ட உணர்ச்சிகளை இதுவரை யாராலும் அழித்துவிட முடியவில்லை. இனியும் முடியாது.

மனிதன் மன அமைதியுடன் வாழவேண்டுமென்றால், இதைச் சிந்தித்துப் பார்த்துத் தெளிவடையவேண்டும். உலகில் நடக்கும் போராட்டங்களுக்கு, இந்த மாறுபட்ட உணர்ச்சிகளின் மோதுதல்களே அடிப்படைக் காரணம். மனித வாழ்வென்பது



இவைகளோடு போராடுவத் தானே? சேர்மன் தளபதி கோயரிங், தான் எழுதிய, “சேர்மனியின் மறு பிறப்பு,” (Germany Reborn) என்ற நூலில், “மனிதனின் வரலாறு போர் வரலாறே,” (The Human History is the History of War.) என்று கூறுகிறான். எனவே மனிதன் இயற்கையினிடம் போரிட்டு, சிலவற்றில் வெற்றியடைந்திருக்கிறான். ஆனால் மனக்குரங்கிடம் மட்டும் இன்னும் அவன் வெற்றியடையவில்லை. அடையவும் முடியாது. அவரவர் வாழ்க்கையில்கண்ட புலவர் முதல் புல்லர் வரையிலும், அரசன் முதல் ஆண்டி வரையிலும், தன் வாழ்க்கையையும் சேர்த்து ஆராய்ந்து பார்த்தால், நூற்றுக்கு ஒரு பகுதியாவது குறை இருக்கத்தான் செய்யும். இதற்கு ஏன் இவ்வளவு விளக்கம்? ஒரே வார்த்தையில் கூறிவிடலாமே, “குறையில்லாத மனிதரே உலகிலில்லை,” என்று. ஆனால் பெரும்பாலும், மக்கள் தமது வாழ்க்கையில் ஒரு சிறிய குற்றம், தவறு நேர்ந்து விட்டால், பிறர் என்ன நினைப்பார்கள், என்ன கூறுவார்கள் என்று அதையே எண்ணியெண்ணி வருந்திக்கொண்டிருப்பார்கள். இது மன வளர்ச்சியும், மன வளமும், பக்குவமும் இல்லாமையைக் காட்டும். இங்குதான் சிந்தனா சக்தியும், பகுத்தறிவும் வேலை செய்தல்வேண்டும். இந்தச் சமயங்களில் வருந்திக்கொண்டிருப்பதில் பயனில்லை. வாழ்விலே வளைந்து கொடுக்கும் இயல்பிருக்க வேண்டும். தன் மனச்சாட்சி என்ன கூறுகிறதோ, அதன்படி நடக்கவேண்டும். குற்றம், தவறு, பிழை எப்படியும் நேரும். மனிதன், தவறக்கூடியவன், குற்றம் செய்யக் கூடியவன்.

### பூரண மனிதன்.

கலங்காத அறிவு, அன்புள்ள நெஞ்சம், நீதியுள்ள தீர்மானம், ஆரோக்யமான உடல், இவைகளே மனிதனைப் பூரணமாக்கும் பண்புகள். கலங்காத அறிவின்றேல், அவசர முடிவு செய்துவிடுவோம். அன்பு நெஞ்சமின்றேல், தன்னலமுள்ளவராயிருப்போம். நீதியான தீர்மானம் இன்றேல், எண்ணம் நல்லதாயிருப்பினும் தீமையே உண்டாகும். உடல் நலம் இன்றேல், எதையும் செய்ய முடியாது.

—ஆவ்பரி.

ஒரு குற்றம் நேர்ந்துவிட்டால், அது குற்றம் என்று தன் மனச்சாட்சி கூறுமானால், அதை ஒரு படிப்பினையாக வைத்துக் கொண்டு, மேலால் குற்றம், தவறு நேராமல்பார்த்துக்கொண்டு

போகவேண்டும். எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக, எல்லோரும் பாராட்டும்படியாக, ஒரு மனிதனாலும் நடக்கமுடியாது. இந்த முடிவோடு மனத் திருப்தியடையவேண்டும். அப்பொழுதுதான் மனிதன் அமைதியுடன் வாழ முடியும்.

வாழ்க்கையில் ஏதாவது ஒரு செயலில் தவறிவிட்டால், அதற்காக வெறுப்போ, சலிப்போ, அதிருப்தியோ, சோர்வோ, கவலையோ, அடையக்கூடாது. இப்படிப்பட்ட நேரங்களில் தான், மனிதனுக்கு உன்மத்தம் பிடித்துவிடுகிறது. அது பைத்தியமாக மாறி, மனிதன் சீரழிந்துவிடுகிறான்.

உலகில் வேறு எந்த நாட்டிலுமில்லாத அளவு பைத்தியங்கள், இந்தப் புண்ணிய பூமியில்தான் இருக்கின்றன. காரணம்; மனவளர்ச்சி யில்லாமைதான். பழம்பெரும் நாகரிகம் படைத்த நாட்டில், ஏன் இந்த நிலை என்பது சிந்தனைக் குரியது.

இந்திய உபகண்டம் முழுதும, பைத்தியம் பிடித்துள்ளவர்கள் 7,18,000 பேர்கள். இதில் 12,804 பேர்கள்தாம் மருத்துவ மனையிலிருந்துவருகிறவர்களாம், மற்றவர்கள நாட்டின் நாலுபக்கங்களிலும் நடைப் பிணங்களாக அலைந்து திரிந்துவருகிறார்களாம். இவற்றில் பெண்பைத்தியங்கள்தாம் அதிகமாம். ஆண்களில் 9 சதவிகிதமும், பெண்களில் 17 சதவிகிதமும், இப்போது கிடைத்துவரும் புள்ளி விபரப்படி பைத்தியங்கள் அதிகரித்துவருகின்றதாம். இவ்வளவு பெருந் தொகையினர் பைத்தியம் பிடித்து அலைவதற்குமுக்கிய காரணம், சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளும், சாதி சமய வேறுபாடுகளும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், குடும்பத்திலுள்ள தொல்லைகளும், வாழ்க்கை முறையிலுள்ள சிக்கல்களும் தாம் என்பவை, இந்திய மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சர்; மத்திய சட்ட சபையிலே வெளியிட்ட புள்ளி விபரமும், கருத்துரையுமாகும். நமது பண்பாட்டைப்பற்றியும், நாகரிகத்தைப்பற்றியும், கலையைப்பற்றியும் பெருமையாக எவ்வளவு பேசினாலும், எழுதினாலும்; ஆதாரமாக, மகஞ்சதாரோ,—ஆரப்பாவைக் காட்டினாலும்; தொல்காப்பியத்தையும், குறளையும் காட்டினாலும், மேலே எடுத்துக் காட்டிய புள்ளி விபரம் நமது மக்கள் வாழ்க்கை முறையும், மனவளப்பமும் சீர்குலைந்து கிடக்கின்றன என்பதைக் காட்டுகிறது. அந்தப் பெருமைகளை இரும்புத்திரை போட்டு மறைத்துவிடுகிறது.

இந்த இரும்புத்திரையைக் கிழித்து, ஆராய்ந்து பார்த்து, காரணங்களைக் கண்டுபிடிக்கும் வேலையை உங்களுக்கே விட்டுவிடுகிறேன்.

பொதுவாக, ஒவ்வொரு மனிதனும், தான் செய்யும் செயலில் பெரும் பாகம் மனித இயற்கைக்கு, மனிதப் பண்புக்குப் பொருந்தியதாயிருந்தால், அதுவே அரும் பெரும் நற்செயல் என்று நினைத்துத் திருப்தியடைதல் வேண்டும். ஆனால் குற்றம்—பிழை-செய்யக்கூடாது என்கிற எண்ணம் மட்டும், எப்பொழுதும் மனதிலிருக்க வேண்டும்.

இப்பரந்த உலகில், நாம் துன்பத்தை வெறுக்கிறோம்; இன்பத்தை விரும்புகிறோம்; துன்பம் நேராமலா இருக்கிறது? இரண்டும்தான் மாறி மாறி வரும். இன்பம் வருகிற பொழுது அதிலேயே மூழ்கிவிடாமலும், துன்பம் வருகிற பொழுது அதிலேயே அழுந்திவிடாமலும், தளராத மனநிலையை — மனப்பண்பை, வளர்த்துக் கொள்ளவேண்டும்; புறநிகழ்ச்சி ஒழுங்குபட வேண்டும். இதை ஒவ்வொருவரும் வாழ்க்கையில் மிக மிக நுணுக்கமாக ஆராந்து, சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும்.



சிறுவர் அறிவுக் கதை உலகில், புகழ்பெற்ற மூன்று அரிய புத்தகங்கள்.

தோழியர் :
ப. க. குஞ்சிதம் எழுதியவை.

★

**வால்முளைத்த சாமியார்**
இரண்டாம் பதிப்பு.
எரித்துவிடுவார், கல்லாக்கிவிடுவார் என்று புரளியைக் கிளப்பிவிட்டு, ஊரை ஏய்த்த வஞ்சகனின் கதை
விலை 0—2—0

**கெட்டிக்காரன்**
இரண்டாம் பதிப்பு.
பள்ளி மாணவ, மாணவிகள், சிறுவர், சிறுமியர்க்குப் பகுத்தறிவூட்டும் மூன்று சிறு கதைகள்.
விலை 0—2—6

**பைங்கிளி**
அண்ணனின் செயலால் தந்தையின் கோபத்துக்கு ஆளாகி, அறிவின் துணையால் துன்பம் கடந்த சிறுமியின் கதை.
விலை 0—2—0

வாணிபர்க்கு :
25% கழிவு தரப்படும்.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்
சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.




[முன் இதழ் தொடர்ச்சி]

என்னுடைய கருத்துப்படி, பெண் ஆணுக்குச் சரிசமானமானவளாவாள். எனக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அவள் கொண்டிருக்கிறாள். அவற்றிற்கு மேலும் ஒன்றைக்கொண்டிருக்கிறாள்—அதாவது, அவள் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவள் என்ற உரிமையாகும். அதுதான் என்னுடைய கோட்பாடு! நீங்கள் எல்லோரும் மணம் புரிந்துகொண்டிருக்கிறீர்கள் — உங்களால் காதலிக்கப்படுகின்ற பெண் மகிழ்ச்சியோடு இருக்க, ஆவனவற்றையெல்லாம் செய்ய முற்படுங்கள். எவனொருவன் அவளுக்காக மட்டுமே மணம் புரிந்துகொள்கிறானோ, அவன் தவறிழைத்தவனாகிறான்; எவனொருவன் "அவளை மகிழ்விப்பேன்" என்று கூறி மணம் புரிகிறானோ, அவன் தவறேதும் இழைப்பதில்லை—அதுபோன்றதுவே தான், "நான் அவனை மகிழ்விப்பேன்" என்று கூறுகிற பெண்ணின் நிலைமையும். மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமானால், அதற்கான ஒரே வழி, மற்றவர்களை மகிழ்விப்பதே; குறுக்குவழிகளில் செல்வதன் மூலம் மகிழ்ச்சியைப் பெறமுடியாது; அதற்கான நேர்வழியிலே சென்றால் தான் அதனைப் பெறமுடியும்.

நான் யாரையாவது ஒருவனை அடியோடு வெறுக்கிறேன் என்றால், அவன்தான், தன்னைத்தானே குடும்பத்தலைவன் என்று எண்ணிக்கொண்டிருப்பவன்—தன்னைத்தானே அதிகாரத் "தலைவன்" என்று கருதிக்கொண்டிருப்பவன். மரப் படகிலே ஏறிச்சென்ற ஆதிகாலத்து மனிதன், நாடாளும் "தலைவன்" தான்தான் என்னும் கருத்துப்பட, அச்சொற்களைப் பயன்படுத்திவந்தான்; அவன் வெளியிட்ட எண்ணங்களிலே அதுவும் ஒன்று.

ஒரு இளைஞனும், ஒரு இளநங்கையும், காதலுணர்வோடு நிலவொளியிலே நடந்து செல்ல, அங்கோர் வானம்பாடி, காதலிசையும், துன்ப இசையும் பொழிய, அவை அவள் உள்ளத்தை முள்ளொன்று தொடுவதுபோல் தொடுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்; அவர்கள், நிலவொளி — உடுக்களின் மின்னொளி—இசைப்பாட்டு இவற்றினிடையே நின்றுகொண்டு, "இப்பொழுது, இங்கு யாருக்கு யார் ஆளுந் தலைவன்' என்பதை, முடிவு செய்து விடுவோம்" என்று கூறிக்கொள்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நான் உங்களிடம் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன், அது ஒரு தீங்கிழைக்கும் சொற்றொடர்—தீங்கிழைக்கும் உணர்ச்சி என்பதாக. ஆளுந்தலைவன் தான்தான் என்ற உணர்ச்சியோடு இருப்பவனையும், குடும்பத்தைக் கட்டி ஆளவேண்டியவன் தான்தான் என்ற உணர்ச்சி கொள்பவனையும் நான் முழு மனதோடு வெறுத்தொதுக்குகிறேன். அப்படிப்பட்ட ஒருவன் கட்டளையிடும்போது, அவன் வாயினின்றும் ஏதோ மாபெரும் எண்ணம் ஒன்று வெளிப்படுவது போலவும், மற்றவர்கள் அதற்காக ஆடாமல் அசையாமல் நிற்கவேண்டும் என்பது போலவும் இருக்கும் முறையை, நான் முழுக்க முழுக்க வெறுக்கிறேன். சொற்களால் விளக்கிக் காட்டமுடியாத அளவுக்கு, அவனை நான் வெறுக்கிறேன்!



மற்ற எல்லாப் பொருள்களைக் காட்டிலும் பண்பற்றமனிதனை நான் வெறுக்கிறேன். பட்டப்பகலிலே படும் சூரிய வெளிச்சத்தைக் குடும்பத்தினர்க்குப்படாமல் மறைக்க, அவனுக்கு என்ன உரிமையிருக்கிறது? குடும்ப வாழ்விலே பொங்கி எழும் மகிழ்ச்சியை அடக்க, அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது? நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லும்போது, ஒளி வீசும் ஒளிக் கதிர் போல் செல்லவேண்டும்! இருள் சூழ்ந்திருக்கும் இரவுக் காலமானாலும், சாளரங்கள், கதவுகள் வழியாகப் பாய்ந்து, இருளை ஓடச் செய்யும் ஒளிக் கதிர்போல் நீங்கள் செல்லவேண்டும்! அது அல்லவா முறை! சில மனிதர்கள், தங்கள் வலிவுள்ள மூளை குழம்பிவிட்டதாக நினைத்துக்கொள்கிறார்கள்; ஐந்தாவது வட்டத்திலிருந்து, யார் நகரசபைக்குப் பிரதிநிதியாக வரக்கூடும் என்பதைப்பற்றிச் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; வேறு சிலர் அரசியல் நிலையைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்; அரும் பெரும் பிரச்சினைகள், மற்றுஞ் சிலரின் உள்ளத்தைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன; ஐந்து அல்லது ஆறு சதத்திற்கு வாங்கிய காலிகோவை, ஏழு சதத்திற்கு விற்க விரும்புகிறார்கள்! இப்படிப்பட்ட பெரும் பிரச்சினைகளில், தங்கள் அறிவினைச் செலவழித்துக்கொண்டிருப்பதாகக் கருதுபவர்கள், வீட்டிற்குச் சென்றதும், வீட்டிலுள்ள மற்றவர்கள், தங்களுடைய நலத்தை மட்டுமே கவனிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். வீட்டில் ஒரு பெண், ஐந்து அல்லது ஆறு குழந்தைகளை வைத்துக்கொண்டு, ஓரிரு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டிருக்க, அவைகளைக் கவனித்துக்கொண்டும், ஓரிரு குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைத்துக்கொண்டும், ஓரிருகுழந்தைகளுக்கு உடைகள் தைத்துக்கொண்டும், பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அவள், மலர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும், தயாராகவும் நின்று, தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று எண்ணுகிறான், குடும்பத் 'தலைவன்' என்று தன்னைக் கருதிக்கொண்டிருப்பவன்!

நான் இன்னொன்று கூற விரும்புகிறேன்—கஞ்சத்தனம் கொண்ட

## அவனே காரணம்.

ஒருவன் பாவத்தைச் செய்கிறான்; பாவக்கரையை அடைகிறான் என்றால் அதற்கு அவனே காரணம். ஒருவன் பாவம் செய்யாதிருக்கிறான்; பரிசுத்தம் எய்துகிறான் என்றால் அதற்கும் அவனே காரணம். மாசுபடிவதும், தூய்மை பெறுவதும் அவனவன் செயலைப் பொறுத்தது. எவனும் இன்னொருவனைப்புனிதமாக்க முடியாது.

—புத்தர்.

வனை நான் இகழ்ந்தொதுக்குகிறேன். பஞ்சமும் வறுமையும் வாட்ட, உலர்ந்த உதடும் ஒட்டியவயிறும் தாங்கிய, பிச்சைக்காரரை அன்றாடம் கண்டும், ஊரில் ஏழ்மைத் தாண்டவமாடுவதைப் பார்த்தும், எப்படி ஒருவனால் ஐந்து கோடி டாலர்களையோ, அல்லது பத்து கோடி டாலர்களையோ, இறக்கும் பொழுது சேமித்துவைத்துவிட்டு இறக்கமுடிகிறது என்பது எனக்குப் புலப்படவில்லை. இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டிருந்துவிட்டு, ஒருவனால், எப்படி மூன்று அல்லது நான்கு கோடி டாலர்களைப் பதுக்கிவைத்துக்கொள்ளமுடிகிறது என்பதை என்னால் எண்ணிப்பார்க்கக்கூட முடியவில்லை. இப்படிப்பட்ட செயலைச் செய்ய ஒருவனால் எப்படி முடிகிறது என்பதைக்கூட என்னால் அறிந்துகொள்ளமுடியவில்லை. நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும், மக்கள் மூழ்கிச் சாகும் கடற்கரையோரத்தில், கட்டைமுட்டை சாமான்களை அடுக்கி, அவர்களைக் காப்பாற்றக்கூட அவன் முன்வருவான் என்று நான் கருதவில்லை.

தங்கள் மனைவிமார்களின் இதய அன்பைக்கொண்டும், மரியாதைப் பண்பைக் கொண்டும் நம்பி வாழுகின்ற ஆடவர் பலரை, நான் கண்டிருக்கிறேன்; கணக்குப் புத்தகத்தையோ, பணத்தையோ அளவு கருவியாகக்கொண்டு எதையும் நம்ப, அந்த ஆடவர்கள் ஒருபோதும் முற்படுவதில்லை. அப்படிப்பட்ட மனிதனைக் காணும்போதெல்லாம், அவன், பொருள்களின் தரம் அறியும் திறமுடையான் என்று, நான் எண்ணிக்கொள்வதுண்டு. உங்களுடைய மனைவியை, ஒரு பிச்சைக்காரியாக மாற்றுவதைப்பற்றி, நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்!... ஒவ்வொருநாளும் ஐம்பது சதத்திற்காகவும், ஒரு டாலருக்காகவும், இரண்டு டாலருக்காகவும், உங்களைக் கெஞ்சிக் கேட்கக் கூடிய நிலையில், உங்கள் மனைவி வைக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்!...... "நான் சென்ற வாரம் உன்னிடத்தில் கொடுத்த ஒரு டாலர் பணத்தை என்ன செய்தாய்?" என்று நீங்கள் கேட்கும்போது, உங்களைக் கண்டு அச்சப்படுகின்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கும் மனைவியைப்பற்றிச் சிந்தியுங்கள்!... பிச்சைக்காரியாகவும், கோழையாகவும் வைக்கப்பட்டிருக்கின்ற தாயாரிடமிருந்து, எப்படிப்பட்டக் குழந்தைகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?... நான் உங்களுக்குக் கூறுவதெல்லாம், உங்க



ளிடம் ஒரு டாலர் பணம் இருக்குமேயானால், உங்களை நீங்கள் ஒரு அரசனாக நினைத்துக்கொண்டு, அதனைச் செலவழியுங்கள்; அதனை ஒரு காய்ந்த சருகாக நினைத்துக்கொண்டு செலவழியுங்கள். எல்லையற்றப் பெருங்காடுகளின் சொந்தக்காரர் என்று நினைத்துக்கொண்டு செலவழியுங்கள்! அதுதான் செலவழிப்பதற்கான வழி! என்பதாகும். ஒரு அரசனாக இருந்து, பிச்சைக்காரனைப்போல் செலவழிப்பதைக் காட்டிலும், நான் ஒரு பிச்சைக்காரனாக இருந்து, என்னுடைய கடைசி டாலர் பணத்தை, ஒரு அரசன் போல் செலவழிப்பதையே பெரிதாக விரும்புகிறேன்! அது செலவழிக்கப்படுவதாக இருந்தால், செலவழிக்கப்பட்டுப் போகட்டுமே!

உங்களுடைய குடும்பத்தை எவ்வளவு நல்ல நிலையிலே வைக்கமுடியுமோ, அவ்வளவு நல்ல நிலையிலே வையுங்கள்!— உங்களைப்பற்றி எவ்வளவு கவலை எடுத்துக்கொள்வீர்களோ, அவ்வளவு கவலை, உங்களுடைய குடும்பத்தைப் பற்றியும் எடுத்துக்கொள்ளுங்கள்! நீங்கள் காதலன்பால் கட்டித் தழுவச் செல்லும்போது, நீங்கள் எவ்வளவு பெருமிதத்தோடு காணப்படுகிறீர்கள்! உங்களுடைய கண் ஒளிவீசுகிறது— உங்களுடைய நடை அழகசைவு கொடுக்கிறது—நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு அரசிளங்குமரன் போல காணப்படுகிறீர்கள்! ஒரு பெண் உங்களைக் காதலன்பால் பிணிக்க வரும்போது, நீங்கள் எவ்வளவு துப்புக்கெட்டவர்களாக இருக்க முடியுமோ, அவ்வளவு துப்புக்கெட்டவர்களாக நடந்துகொண்டால், அப்போது நீங்கள் சகிக்கமுடியாத தற்புகழ்ச்சிக் காரர்களாகக் காட்சியளிக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அதுபற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! உங்களால் ஆனவரையிலும் நீங்கள் அன்பு காட்டுவீர்களேயானால், உலகிலுள்ள எந்த ஒரு நல்ல பெண்மணியும் உங்களிடத்தில் இறுதி வரையில் அன்புடன்தான் இருப்பாள்!

"காதலைப்பற்றியும், மனைவிமார்களைப் பற்றியும், மற்றுமுள்ளவர்களைப் பற்றியும் நீ கொண்டிருக்கிற கோட்பாடு, பணக்காரர்களுக்கு வேண்டுமானால் அழகு வாய்ந்தனவாக இருக்க முடியுமேயொழிய, ஏழைகளுக்கு எந்த விதத்திலும் பயன்படுவதாகா" என்று சிலர் சொல்லக் கூடும். பணக்காரர்களின் அரண்மனையைக் காட்டிலும், ஏழைகளின் எளிய குடிசைகளிலேதான், அன்பு அதிகமான அளவுக்குத் தாண்டவம் ஆடுகிறது. அன்பு தவழ்கின்ற மிகச் சாதாரணக் குடிசை — 'கடவுள்கள்' வாழுவதற்கேற்ற சீரிய அரண்மனையாகும்! அன்பு தவழாத அரண்மனை—காட்டு விலங்குகள் வாழ்வதற்கான இருட்குகையாகும்! இதுதான் என்னுடைய கோட்பாடு! நீங்கள் ஒவ்வொருவரும், பிறர்க்கு உதவி செய்யமுடியாத அளவுக்கு, அவ்வளவு ஏழையாகி விட்டீர்கள் என்று கூறிவிடமுடியாது. நல்ல பழக்கம், உலகிலேயே மிக மலிவான பொருளாகும்! அன்பு ஒன்றுதான் கொடுத்தவனுக்கும், வாங்கினவனுக்கும் சம அளவு பலனைத்தரும் அரும்பொருளாகும். 'பணக்காரர்

களாகும் வாய்ப்புடையோம் என்று சொல்லிப், பெருமையடித்துக் கொள்ளாதீர்கள்! இங்கு—அமெரிக்காவில், தவறான முறையில், பெருந்தன்மைக்குப் பொருள் கொண்டுள்ளோம். இங்கு, ஒரு மனிதன் பெருமையாகக் கருதப்படவேண்டுமானால் அவன் இழிடுறைகளில் வளர்ந்து, பலரறியும் பேருடையவனாக இருக்கவேண்டும் என்றும், அவன் பெரும் பணக்காரனாகவேண்டும் என்றும், மக்களிடையே உலாவும் வதந்திகளில் அவன் பெயர் எப்பொழுதும் அடிபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்றும் எண்ணிக் கொள்கிறோம். இதெல்லாம் தவறுபட்ட மனப்பான்மையாகும். ஒருவன் மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கு அவன் பணக்காரனாகவோ, பெரியமனிதனாகவோ, அதிகாரம் படைத்தவனாகவோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. மகிழ்ச்சியுடையவனே வாழ்க்கையில் வெற்றிபெற்றவனாவான்.

மகிழ்ச்சி, உயிர் வாழ்க்கைக்கு முறையான பரிசாகஇருந்து இலங்குகிறது!

மகிழ்ச்சிதான் மட்டற்ற செல்வமாகும்!

நான், சிறிது நேரத்திற்குமுன்பு, மாவீரன் நெப்போலியனின் கல்லறையின்முன்னால் நின்றிருந்தேன்—சலியாமல் உழைத்தஅவன், புழுதியாய்ச் சமைந்து கிடந்த இல்லறையைக் கண்டேன்; அருமையும், அழகும் வாய்ந்த பளிங்கினால் மூடப்பட்டிருந்த அந்தக்கல்லறையைக் கண்டேன்; அதன்மேல் மின்னும்பொன் ஒளிவீச,நாட்டப்பட்டிருந்தஅழகான நடுகல்லையும் கண்டேன்! அந்தக் கல்லறையின் சுற்று மதிற்சுவரைப் பற்றி நின்று, எட்டிப்பார்த்தேன்; ஏதேதோ நினைத்தேன்; புது உலகத்தின் அம்மாபெரும் வீரன், ஆற்றிய செயலாற்றல்களைப் பற்றிச் சிந்தித்தேன்! அந்தக் காட்சிகள் என் உள்ளத் திரையிலே படிந்து காணப்பட்டன!

அவன், தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, தற்கொலை செய்துகொள்ளும் நினைப்புடனே, சேன் நதிக்கரையில் உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டேன் — அவன் தூலான் நகரில் நடமாடுவதைக் கண்டேன்—அவன் பாரிஸ் நகரத் தெருக்களில், கிளர்ச்சியுற்று எழுந்து ஆர்ப்பரித்து நின்ற மக்கட் கூட்டத்தை அடக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன்–அவன், இத்தாலியில் போர்ப்படைத் தலைவனாக இருப்பதைக் கண்டேன்—அவன் மூவண்ண பிரெஞ்சுக்கொடியைக் கையிலேந்திக்கொண்டு, லோடி ஆற்றுப் பாலத்தைக் கடந்துகொண்டிருப்பதைக் கண்டேன்–அவன் எகிப்து நாட்டுப் பிரமிட்களின் நிழலிலே நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்—அவன் ஆல்ப்ஸ் மலைகளை வென்று வெற்றிக்களிப்போடு வீற்றிருப்பதைக் கண்டேன்—அவனது பிரான்ஸ் நாட்டுக் கொடிகளிலே பொறிக்கப்பட்டிருக்கும் கழுகுகள், மலைமுகடுகளின்மேல் நின்றிருக்கும் கழுகுகளோடு கலந்திருப்பதைக் கண்டேன் — அவன் மராங்கோ, உல்ம், ஆஸ்டர்லிட்ஜ் ஆகிய போர்க்களங்களில், கடும் போரிட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டேன்—கடும் பனியும், கடுங்காற்றும் படையணிகளையெல்லாம் சின்னாபின்னமாக்கிக்கொண்டிருக்க, ரஷ்யாவின் களத்திலே அவன் கவலையற்று நிற்பதைக் கண்டேன் — லீப்ஸிக்கில் தொல்லையையும், தோல்வியையும் அவன் அணைப்பதைப், பாரிஸ் நகரில் பல்லாயிரக் கணக்கான துப்பாக்கிகள் பின்தொடர அவன் செல்வதை; காட்டுவிலங்கு பிடிபடுவதுபோல் அவன் பிடிபடுவதை, எல்பா தீவிற்கு அவன் நாடு கடத்தப்படுவதை ஆகிய எல்லாவற்றையும் கண்டேன்—அவன் தப்பி ஓடிவந்து, தன் பேரரசைத் தன் அறிவாற்றலின் வலிவால், மீண்டும் கைப்பற்றிக்கொள்வதைக் கண்டேன்—அவனுடைய வாய்ப்புகளும், வசதிகளும் அடியோடு அழியக்கூடிய விதத்திலும், காண்போர்க்கு அச்சமூட்டும் வகையிலும் அமைந்த வாட்டர்லூ போர்க்களத்தில், அவன் கலங்கா நெஞ்சத்துடன் நிற்பதைக் கண்டேன்—தன் இருகைகளையும் பின்புறத்தில் கட்டிக்கொண்டு, அமைதியும் அந்த காரமும் சூழப்பெற்றதாய் அசைவற்றதுபோல் காணப்படும் பெருங்கடலிலே, தன் பார்வையைச் செலுத்திக்கொண்டு, செயின்ட் ஹெலினா தீவில், அவன், சிறைப்பட்டுக் கிடப்பதையும் கண்டேன்!

அவன் காரணமாக ஏற்பட்ட விதவைப் பெண்களையும், அநாதைச் சிறுவர்களையும் பற்றிச் சிந்தித்தேன்–அவன் பெருமையடைய, மக்கள் சிந்திய கண்ணீர் வெள்ளத்தைப்பற்றிச் சிந்தித்தேன்—காதலன்பைக் காட்டித், தன்னை நாடி வந்த கட்டழகியை, நாடுபிடிக்கும் பேராசையின் காரணமாக அவன் ஒதுக்கித்தள்ள, அவள் சிந்திய கண்ணீர்த் துளிகள்பற்றிச் சிந்தித்தேன்! அப்படிப்பட்ட அந்த மாவீரனைக் காட்டிலும், அற்றுப்போன மிதியடிகளைப் போட்டுக்கொண்டு உலாவும் ஒரு சாதாரண பிரெஞ்சுநாட்டு உழவனாக இருப்பதே மேல் என்று எண்ணினேன். திராட்சைக் குலைகள் கதிரவன் ஒளியிலே கவர்ச்சி கொடுத்துக்கொண்டிருக்க, திராட்சைக் கொடிகள் கதவின்மேல் படர்ந்து காணப்பட, ஒரு சிறு குடிசையில் வாழும் வாழ்வையே பெரிதென மதிக்கிறேன். கதிரவன் மறைந்த மாலை வேளையில், தோள்மீதும் துடைகள் மீதும் ஏறிக் குழந்தைகள் விளையாட, அருகில், அன்பு மனைவி தையல் தைத்துக்கொண்டிருக்க, அகமகிழ்வோடு அமர்ந்திருக்கும் ஒரு ஏழைக் குடியானவன் வாழ்க்கையையே நான் பெரிதென விரும்புகிறேன். [தொடரும்]

## கலைஞர்களின் கடமை.

நமது இலக்கிய நிபுணர்கள், பொதுமக்களுக்குரிய செய்தித்தாள்களில் கருத்தைச் செலுத்த வேண்டும். நமது நாடக நிபுணர்கள், கிராமப்பகுதிகளிலுள்ள சிறு நாடகக் குழுவில் கவனத்தைத் திருப்பவேண்டும். நமது இசை நிபுணர்கள், பாமர சங்கீதத்தில் கவனம் செலுத்தவேண்டும். நமது கலைஞர்கள் எல்லோரும், பொது மக்களுக்குரிய கலையில் போதிய அக்கரைகாட்டவேண்டும்.

—மா சே-துங்

# பொன்மொழிகள்

பகுத்தறிவே மனிதனுடைய உயர்வுக்குக் காரணம். எனவே அது கற்பிக்கின்ற வழியினின்றும் விலகாமையே உத்தமம்.

—அக்பர்.

உன் கடமையைச் செய்ய முயலுக; அப்பொழுது உன் தகுதியையும் நீ அறிந்து கொள்ளலாம்.

—கதே.

குறைந்த அளவு தீமையும், கூடிய அளவு நன்மையும் விளையும்படி வாழ்வதே தலை சிறந்த வாழ்வாகும்.

—ரோமைன் ரோலந்து.

ஒரு தேசபக்தனை, அவனுடைய தேசத்திலிருந்து விரட்டிவிடலாம். ஆனால், அவன் உள்ளத்திலிருந்து அவனுடைய தேசத்தை விரட்ட முடியாது.

—வால்டேர்.

கடமைகளைச் செய்வதிலிருந்துதான் உரிமைகள் பிறக்கின்றன.

—காந்தியார்.

வல்லமையுள் வல்லமை என்பது, அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

—திருவள்ளுவர்.

உறுதியாக இரு; நல்லவனாக இரு; தூய்மையாக இரு; நேர்மை நிலைக்கும்.

—லாங்ஃபெல்லோ.

தேர்தலில் பெரிய மனிதனைத் தேர்ந்தெடுப்பதைவிட, ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைப்பது எளிதாகும்.

—இட்லர்.

இன்பம் காண இருவழிகள்; தேவையைக் குறைப்பது, அல்லது வருவாயை அதிகப்படுத்துவது. இரண்டில் ஒன்று போதும், பலன் என்னவோ ஒன்றே.

—பிராங்க்லின்.

போர்க் களத்திலே ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்றவனைவிட, தன்னைத் தானே வென்றவனே பெரிய வீரன்.

—புத்தர்.

சமயம்பற்றிச் சிந்திக்காதவன், தான் பிறந்த சமயமே உண்மைச் சமயமென்று எண்ணிக்கொள்கிறான்.

—டால்ஸ்டாய்.

தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்க்கை, காலால் நடப்பதற்கு மாறாகத் தலையால் நடப்பது போன்றதாகும்.

—எமர்சன்.

அன்பும், மரியாதையும் மனிதனிடத்தேயுள்ளவை. அவற்றைச் சந்தையில் வாங்க முடியாது. துப்பாக்கி முனையிலும் பெற்றுவிடமுடியாது.

—ஜவகர்லால்.

# பிரார்த்தனை

[ப. க. குஞ்சிதம்]

★

"அம்மா இங்கே வெளியில் வந்து பார். எல்லோரும், தண்ணீரை எடுத்து மேளதாளத்தோடு குதித்துக் கொண்டு போகிறார்கள். வந்து பாரேன்!" என்று கூப்பிட்டான் தமிழ்மணி. அவன் தாயாரும் வெளியே வந்தாள். பார்த்தாள். "தமிழ்மணி! இது மாரியம்மன் பண்டிகைக்கு சக்தி, சாமி அழைத்துச் செல்கிறார்கள்;" என்றாள். அம்மா! வெறும் தண்ணீர் கூட பண்டிகையென்றால் சாமியாயிடுதே என்னம்மா! இந்தத் தண்ணிரிலேயா சாமி இருக்கு என்று கேட்டான் தமிழ்மணி.

"படவா நாயே! நீயும் உங்கப்பா மாதிரிதானே இருப்பாய்; இருந்தாலும் இப்படிப் பேசாதே, இது தண்ணியல்ல. மாரியம்மனின் கணவன் கிணற்றில் இருக்கிறான். அவனைப் பண்டிகைக்கு அழைத்துச் செல்கிறார்கள்" என்றாள். "ஏம்மா! மாரியம்மன் கோயிலில் இடமில்லையா? அவள் கணவன் ஏன் கிணற்றிலே போய் இருக்கிறான்?" என்று கேட்டான். அவன் கேள்வியால் அம்மா திடுக்குற்றாள். யோசித்தாள். மாரியம்மனுக்கும், அவள் கணவனுக்கும் சண்டை வந்து கோபித்துக்கொண்டு போய்விட்டான்" என்றாள். "அடே! சாமியும் மனிதரைப் போல் சண்டை போட்டுக்குமா? அப்ப மனிதனும், சாமியும் ஒண்ணுதானா?" என்றான். அம்மாவுக்கு தான் சொல்வதற்கெல்லாம் மகன் கேள்வி கேட்பது சங்கடமாக இருந்தது. இருந்தாலும் சரியான பதில் சொல்லி அவனை நம்பவைக்க முயன்றாள்

"தமிழ்மணி! உனக்கு விபரமாகச் சொன்னால்தான் தெரியும். ஆதியில் நடந்தது இது; ஒருநாள் மாரியம்மன் கணவனிடம் ஒரு காசு கொடுத்து, சந்தைக்கடையில் எல்லாசாமானும் வாங்கிவரச் சொன்னாள். ஆனால் மாரியம்மனின் கணவனுக்கு என்ன வாங்குகிறதென்று புரியவில்லை. திகைப்புடன் திரும்பிவந்தான். அப்போது மாரியம்மன் எண்ணெய் காய்ச்சிக் கொண்டிருந்தாள். கணவன் வெறும் கையுடன் திரும்பினதைக்கண்டாள். அவளுக்கு ஆத்திரம் கடல் அலையெனப் பொங்கியது. கொதிக்கும் எண்ணெயைத் தூக்கிக் கணவன் மேல் ஊற்றிவிட்டான். எரிச்சல் தாங்காமல் அவன் கிணற்றில் போய் விழுந்து விட்டான்.

"மாரியம்மன் ஆத்திரத்தில் செய்ததற்கு, அவன் அப்படி பயந்து ஓடிவிட்டான். வேறு ஒன்றும் சண்டையில்லை" என்றாள் அம்மா. தமிழ்மணி சிறிது நேரம் யோசித்துக்கொண்டே நின்றான். அம்மா! நீயும் மாரியம்மன் நல்லவள் என்கிறாயே, ஒரு காசுக்குச் சாமான் வாங்கிவரச் சொல்வது, முடியாவிட்டால், அதற்காகக் கொதிக்கும் எண்ணெயைப் புருஷன் மேல் ஊற்றுவதா? இது கதையாக இருந்தாலும் நம்பமுடியாதே! இதுதான் மாரியம்மனின் வரலாறு? என்றான்.

இது உண்மையாகநடந்ததுதானாம்.

திருநீரும், சிவப்புக் குங்குமமும் சகல சமான்களுக்கும் ஈடு, எல்லாப் பெருமையும் உள்ளவை. இது அவனுக்குத் தெரியவில்லை என்றாள். "ஏம்மா! மாரியம்மன் விவரமாகச் சொல்லியிருந்தால் என்ன? இதுக்காகக் கொதிக்கும் எண்ணெயைக் கணவன் மேல் யாராவது ஊற்றுவார்களா? 'ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு' என்பதுபோல் தான் இருக்கிறது. இந்த மாரியம்மனைப் போய் சாமின்னு கும்பிடுகிறதா? இவளாலே நமக்கு என்ன பிரயோசனம்?" என்றான்.

"தமிழ்மணி! அப்படிச் சொல்லாதேடா. மாரியம்மனால்தான், முன்னொரு தடவை நீ பிழைத்தாய்; டாக்டரே நீ பிழைக்கிறது கடினம்னு சொன்னார். உங்கப்பா மனமிடிந்து உட்கார்ந்துவிட்டார். நீ பிழைத்து எழுந்தால், உருளுதண்டம் போட வைக்கறேன்னு மாரியம்மனிடம் பிரார்த்தனை வைத்துக் கொண்டேன், அந்த நிமிஷத்திலே இருந்து உனக்கு உடம்பு குணமடைந்தது. இப்ப நான் சொல்றபடி செய். அப்பாவும் காலைக்கு சாயந்திரமாதான் வருவார். பக்கத்துவீட்டு பாலன் கூட உருளுதண்டம் போடப்போகிறானாம். நீ அவனுடன் மாரியம்மன் கோயிலுக்குப் போய், பிரார்த்தனையைச் செலுத்திவிட்டுவா" என்றாள்.

"ஓஹோ! இதுக்காகத்தான் நான் கேட்டதற்கெல்லாம், கடிந்துகொள்ளாமல் பதில் சொன்னாயோ! மாரியம்மன் ஒன்றும் என்னைக் காப்பாற்றவேண்டாம். நான் போய் சேற்றில் உருளமாட்டேன். தகப்பன் நாலடி பாய்ந்தால், மகன் எட்டடி பாய்வான் என்று எங்க வாத்தியார் சொல்லுவார். நீதானே பிரார்த்தனை வைத்துக்கொண்டாய்? நீயே உருண்டுவா" என்றான் தமிழ்மணி.

மகனின் இடுக்கான பேச்சைக் கேட்டு தாய் மனம் நொந்தாள். "அதிகப்பிரசங்கி! அவர் தான் மனம் வருந்த இப்படிப் பேசுகிறார் என்றால், எட்டடி பாயுமாம் குட்டிக் கழுதை! மரியாதையா நான்சொல்றபடி செய்யணும். இல்லே, சோத்துக்குத் தாளம் போடவேண்டியது தான்" என்று மிரட்டினாள்.

தாயும், மகனும் பேசுவதைக்கேட்டுக்கொண்டே தெருவில் ஒரு கிழவர் நின்றிருந்தார். தமிழ்மணியின் முகத்தைப் பார்த்ததும், ஒருவித உணர்ச்சி அவரை அவனருகில் செல்லத் தூண்டியது; சென்றார்.

"அம்மா! பையனுக்கு விருப்பமில்லாத பிரார்த்தனையைச் செலுத்தாதீர்கள். தெய்வம் பெரிதல்ல, குழந்தைதான் முக்கியம்" என்றார். கோபத்துடனிருந்த தமிழ்மணியின் தாய்க்கு, அவர் பேச்சால் கோபம் பொங்கியது. "போதும்! நீ ஒன்றும் எங்கள் பேச்சில் குறுக்கிடாதே! வழியிலே போகிறவனுக்குப் பேச்சைப்பார்!" என்றாள் கடுகடுப்புடன். "அம்மா! கோபிக்காதீர்கள். என் வாழ்க்கையே எனக்குப் படிப்பினையாக அமைந்தது. அதைக் கேட்டால் கடவுள் என்று ஒன்று இருக்கவே முடியாது என்பீர்கள்" என்றார் அவர்.

"தாத்தா! உன் வாழ்க்கையில் நடந்ததைச் சொல்லேன்" என்றான் தமிழ்மணி. "ச்சீ! வாழ்க்கையாம்,



மண்ணாம். அவனிடம் உனக்கென்ன பேச்சு? உள்ளே வா" என்று தாய் இழுத்துச் சென்றாள். தமிழ்மணி திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே சென்றான். ஏதோ ஒருவித பாசம் தமிழ்மணியையும், அந்தக் கிழவரையும் இணைத்தது. இருவர் பார்வையிலும் ஏக்கம் தோய்ந்திருந்தது.

அன்று இரவில்கூட அந்தக் கிழவரின் முகம் தமிழ்மணியின் முன் தோன்றிக்கொண்டே இருந்தது. ஏனோ அவர் சொல்வதைக் கேட்க வேண்டுமென்ற துடிப்பேற்பட்டது. அவர் நினைவாகவே இருந்தான். விடிந்தது. காலை உணவும் முடிந்தது. தமிழ்மணி வெளியில் வந்தான். அந்தக் கிழவர் தெருவில் நிற்பதைக் கண்டான். அவருக்கும் அவனைப் பார்க்காமல் இருப்புக் கொள்ளவில்லை. "தாத்தா! நேற்று என்னமோசொல்றேன்னீங்களே. சொல்கிறீர்களா?" என்றான். "தம்பி! நான் சொல்வது உனக்குப் புரியுமா?" என்றார்.

அவர் கண்களில் நீர் நிரம்பியது. "தாத்தா! ஏன் அழுகிறீர்கள்? வேறு இடத்திற்குப் போகலாம். இங்கிருந்தால் அம்மா பேசுவாள்" என்றான். சிறுவனின் அறிவைக்கண்டு வியந்தார். பிறகு அவரும் தமிழ்மணியும் ஒரு சத்திரத்திற்குள் சென்றனர்.

"தாத்தா! சொல்லுங்கள்" என்று துரிதப்படுத்தினான் தமிழ்மணி. கிழவர் சொன்னார்: "தம்பி! என் சொந்த ஊர் சேலம். நானும் ஒரு காலத்தில் சிறப்பாக வாழ்ந்தவன்தான். சேலம் மேட்டு மாரியம்மன் கோயில்கூட, நான் கட்டியதுதான். அந்தக்கோயிலில் நடக்கும் எந்த உற்சவமும் நானில்லாமல் நடைபெறாது. இந்த நெற்றியில் உள்ள கட்டான விபூதியைப் பார்ப்பவர்களுக்கே பக்தி உண்டாகும். எனக்கு ஒரே ஒரு பையன் இருந்தான். அவன் பேச்செல்லாம், நீ நேற்றுப்பேசினதுபோலவே இருக்கும். நான் எவ்வளவோ பக்தி மார்க்கத்தைச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. கோயில் உற்சவத்தின் போதெல்லாம், ஏன்? என்ன? எப்படி? எதற்கு? என்று கேட்டு என்னிடம் அடிபடுவான்.

ஒரு நாள் திடீரென்று அவனுக்குக் காய்ச்சல் வந்தது. நல்ல டாக்டரை அழைத்துவந்தேன். ஊசியும், மருந்தும் வேளை தவறாமல் கொடுத்து வந்தோம். திருப்பதியில் முடி இறக்குவதாகப் பிரார்த்தனை வைத்துக் கொண்டேன். அவன் உடம்பும் குணமடைந்தது. உடனே பிரார்த்தனை செலுத்தவேண்டுமென்றேன். ஆனால் என் மகன் சொன்னான்: 'அப்பா! டாக்டர் எனக்கு எவ்வளவு மருந்து கொடுத்து ஊசி போட்டார்? அதெல்லாம் வீண்தானா? வெங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை வைத்ததால்தான் என் உடம்பு குணமடைந்ததா? டாக்டரை எதற்காக அழைத்துவந்தீர்கள்? யோசித்துப் பாருங்கள்' என்றான். என் மனைவியும் அப்பொழுது எட்டு மாத கர்ப்பிணி. "பையனின் உடம்பு பலவீனமாயிருக்கிறது. ரயில் பிரயாணம் தாங்காது. எனக்கும் உடம்பு சரியான நிலையிலில்லை" என்றாள். அவளும் புறப்பட மறுத்தாள் உடனே பிரார்த்தனையைச் செலுத்த வேண்டுமென்ற பிடிவாதத்தால் புறப்பட்டேன் எங்களுடன் பிரயாணத்திற்கு யாரையும் அழைத்துச் செல்ல

இல்லை. வெங்கடாசலபதியே துணை என்று என் மனைவி, மகனுடன் புறப்பட்டேன். திருப்பதிமலை ஏறும்போதே என் அன்பு மனைவி முகம் சுளித்தாள். 'கடவுள் காப்பாற்றுவார்' என்று ஆறுதல் கூறினேன்.

அவளை வசதியாக அழைத்துச் செல்லவும் நான் நினைக்கவில்லை. கஷ்டப்பட்டால்தான், கடவுள் அருளைப் பூரணமாகப் பெறமுடியுமென்று நம்பினேன். பாதிதூரம் போயிருப்போம். திடீரென்று என் மனைவி மயங்கிவிழுந்தாள். பதறினேன். பலருடைய உதவியுடன், நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு எடுத்து வந்தேன். ஆனால் அவள் விழுந்த அதிர்ச்சியில், வயிற்றில் இருந்த குழந்தை இறந்துவிட்டது. அதன் பயனாக அவளும் மடிந்தாள். 'தெய்வமே! உன் கிருபை இதுதானா?' என்று அலறினேன். அடித்துக் கொண்டேன். 'பட்டகாலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பது மெய்யாயிற்று. மறுநாள் என் மகனையும் காணவில்லை. எங்கோ போய்விட்டான். துக்கத்தை வெளியிடவும் சக்தியற்றவனானேன். பித்தனைப்போல் மகனைத் தேடியலைந்தேன்.

என் மகனின் உடல், ஒரு பாழடைந்த கிணற்றில் மிதப்பதைக் கண்டேன். அவன் அணிந்திருந்த நகைகளுக்கு ஆசைப்பட்டு, எவனோ அப்படிச் செய்திருக்கிறான். அயலூரில் மனைவியையும் மகனையும் இழந்து கதறினேன். கடவுள் என்நிலையைக் கவனித்தாரில்லை. மடமையால் மனைவி மக்களை இழந்தேன். ஊர் திரும்ப மனமில்லை. பரதேசிபோலானேன். பிச்சைக்காரனாக அலைகிறேன் பதினைந்து வருடமாக! நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்தேன்.

நான் திருப்பதிக்குப் போகும் பொழுது, சேலத்தில என் ஒரே தம்பி மணம் முடிக்கும் பருவத்திலிருந்தான். அவனிடம் மாறாத அன்புகொண்டிருந்தேன். அவனைக் காணவேண்டுமென்றும், அவன் குழந்தை குட்டிகளையாவது காணவேண்டுமென்றும் ஆவலுண்டாகிறது. பிச்சைக் கோலத்துடன் அவனைச் சென்று பார்ப்பதா என்று அஞ்சுகிறேன்" என்று முடித்தார் அவர். அவர் கண்களில் தாரை தாரையாக ஒழுகியது கண்ணீர். குழந்தைபோல் தேம்பினார்.

தமிழ்மணியும் அழுதேவிட்டான். ஏதோ அப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. "உங்க தம்பியின் பெயர் என்ன? உங்க பெயர் என்ன?" என்று கேட்டான். "அவன் பெயர் அன்பானந்தம், என் பெயர் உத்தமலிங்கம்" என்றார். "எங்க அப்பா பெயர், அன்பானந்தம் தான். எங்க சொந்த ஊரும் சேலந்தான். இந்த ஊரில் அப்பா உத்தியோகம் பார்க்கிறார். நீங்கள் என் பெரியப்பாவேதான்! அப்பாவும் சொல்வார்: அண்ணா' பிரார்த்தனை செலுத்தப் போனவர்தான் அப்படியே போய்விட்டார். பாழும் சாமியும், வேண்டாம் பிரார்த்தனையும் வேண்டாம் என்று, அடிக்கடி சொல்லிக்கொண்டு. வருத்தப்படுவார் வீட்டுக்குப் போகலாம் வாருங்கள்' என்றான் தமிழ்மணி. கிழவர் பேராச்சரியமடைந்தார். நீ என் தம்பியின் மகனா?" என்று தமிழ்



மணியைக் கட்டிக்கொண்டார். இருந்தாலும், தம்பியைக் காணத் தயங்கினார். "சரி! அப்பாவும் சாயங்காலந்தான் ஆபிசிலிருந்து வருவார். பிறகு போகலாம்" என்று அங்கேயே இருந்தான் தமிழ்மணி.

'வீட்டில் தமிழ்மணியைக் காணாமல் தாயார் தவித்தாள். "ஐயோ பாவி நான் பிரார்த்தனைக்காக உருளுதண்டம் போடச் சொல்லி பலவந்தப்படுத்தினேனே எங்கே போயிட்டானோ?" என்ன செய்வேன்? அவன் அப்பாவிடம் என்ன சொல்வேன்" என்று அழுதுகொண்டே இருந்தாள். சாயந்திரம் தமிழ்மணியின் தந்தையும் வந்தார். மகனைக் காணோமென்றதும் . மருண்டார். துடித்தார். ஆட்களை அனுப்பி நாலு பக்கமும் தேடச் சொன்னார்.

அந்திவேளையாகியும் வீட்டுக்குப் புறப்பட உத்தமலிங்கம் தயங்கியவாறே இருந்தார். தமிழ்மணி விட்டுப்பிரிய மனமின்றி அவருடனேயே இருந்தான். இருட்டியும்விட்டது. அங்கு அவர்கள் வீட்டு வேலைக்காரன் வருவதைப் பார்த்தான் தமிழ்மணி. மகிழ்ந்தான். "பெரிய தம்பி! அப்பாகிட்டே போய், உத்தமலிங்கம் பெரியப்பா இங்கே இருக்கிறாரென்று சொல்லி, அழைத்துவா; சீக்கிரம் போ" என்று விரட்டினான் வேலைக்காரனை.

சிறிது நேரத்தில் அன்பானந்தம் அங்கு வந்தார். 15 வருடங்களானாலும், அன்பு மாறாத அண்ணனின் முகத்தைக் கண்டார். "தம்பி!" என்று ஆனந்தக் கண்ணீர்விட்டார் உத்தமலிங்கம். "அண்ணா! உங்களை எங்கெங்கு தேடி அலைந்தேன். ஒரு தகவலும் கிடைக்கவில்லையே. அண்ணி, சிவானந்தம் எல்லாம் எங்கே" என்று கேட்டார். "தம்பி! நான் திருப்பதிக்குப் பிரார்த்தனை செலுத்தப்போனதன் பலனை நன்கு அனுபவித்து விட்டேன். எல்லாவற்றையும் சொல்லுகிறேன். இரத்தக்கலப் புணர்ச்சிதான் என்னையும் தமிழ்மணியையும் சேர்த்துப்பிணைத்தது. அறிவுலகை உருவாக்க ஏற்றவன் இவன்" என்றார் கிழவர். "அப்பா! பெரியப்பா களைப்போடிருக்கிறார். வீட்டுக்குப் புறப்படுங்கள்" என்று துரிதப்படுத்தினான் தமிழ்மணி. மேலும் அவன் சொன்னான்: "அப்பா! இனிமே எனக்காக அம்மாவை எந்தக் கோவிலுக்கும் பிரார்த்தனை வைக்கவேண்டாம்னு கண்டிப்பா சொல்லிடுங்க" என்று.

"கண்டிப்பாகச் சொல்லிவிடுகிறேன் கண்ணா" என்றார் தந்தை.

ⴰⴰⴰⴰ

## என் வாழ்க்கை.

என்னுடைய வாழ்க்கை, சமூகம் முழுதுக்குமே சொந்தமானது என்பது என் கருத்து. நான் உயிருடன் வாழும் வரையில் என்னால் முடிந்ததையெல்லாம் அதற்குச் செய்வது என் உரிமையும் பேறுமாகும். வாழ்க்கையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். வாழ்க்கைக்காகவே நான் வாழ்க்கையை நடத்த விரும்புகிறேன்.

182314

# ஆசியாவும் மேலைநாடுகளும் மதமும்.

ஆவ்ரோ மேன்ஃகாட்டன்

[மொழி பெயர்ப்பு: சேலம். எம். சீதாராமன்]

ஒரு தனிப்பட்ட நபரைப் போலவே ஒரு தேசத்தாரும், ஒரு தேசத்தாரைப் போலவே ஒவ்வொரு நாகரிக அமைப்பும், தற்புகழ்ச்சியான மயக்கத்தைக் கொண்டே வளர்கின்றன. உண்மையாக உள்ள கொடுமைகளுக்கு ஏமாற்றுவதைப் பரிகாரமாகக் கையாண்டால், அது ஆபத்தில் கொண்டு வந்துவிடும். உண்மையான கொடிய நிலைமைகளை, உண்மையான, நேர்முக ஏற்பாடுகளாலேயே தீர்க்கமுடியும். இப்பொழுது மனிதக் கூட்டம் அளவிடக்கூடாத அச்ச நிலையில் உள்ளது. தடங்கல் இல்லாத வேகத்துடன் சமாளித்தாலன்றி, உலகம் குருதிக் கடலில் தோயும்.

பழங்கதை-கோட்பாட்டுக் கட்டிடம் பலமிழந்து, நடுநடுங்கி முடிவடையும் நிலையில் உள்ளது. உண்மையில் அக் கட்டிடம் கீழே விழுந்துகொண்டுவருகிறது. மிகப் பழமையான நிலையங்கள் விழுந்துவிட்டன. புதுமையான கட்டிடங்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. 40 ஆண்டுகட்கு முன்னர், ஆஸ்திரியா-ஃகங்கேரியாவின் சிம்மாசனத்தில், ஃபிரான்சு ஜோசப் சுகமாக வீற்றிருந்தான். ஜெர்மன் சாம்ராச்சியத்தை கெய்சர் ஆண்டான். ரோமனுப் குடுபத்தவர்கள் ரஷ்ய சாம்ராஜ்பத்திற்கு மன்னர் மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். கிழக்கு மத்தியதரைக் கடலில், சுல்தான் வலுத்திருந்தான். சீனாவில் மான்சு குடும்பத்தார்கள் அரசுபுரிந்தார்கள். அமெரிக்கா கடனாளியாக இருந்தது. கம்யூனிசத்தைப்பற்றிப் பேசுபவர்களை, பகற் கனவுக்காரர்கள் என்றார்கள். இந்த 40 ஆண்டுகட்கு இடையில், போல்ஷ்விக் புரட்சி யுண்டாயிற்று. இரண்டு உலகப் போர்கள் நடந்தன. பாசிசம் தோன்றி அழிந்தது. இங்கிலாந்துதேசமும், ஃபிரான்சு தேசமும் கேவலமான நாடுகளாக மெலிந்தன. ரஷ்யாவும், அமெரிக்காவும் உலகத்தில் இரண்டு மாபெரும் தோற்றங்களாகத் திகழ்கின்றன. மங்கியிருந்த ஆசியா, தூக்கத்திலிருந்து மிக வேகத்துடன் எழுந்திருக்கிறது.



இந்த வேகம் எவருக்கும் புலப்படக்கூடியதாகவே இருந்தது. அது இப்பொழுது மேலை நாட்டாரின் நினைவையும், நெஞ்சத்தையும் கலக்கிக்கொண்டு வருகிறது.

உலகில் அரசியல் சம்பவங்கள் உண்டாவதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் மிக முக்கியமானது, விஞ்ஞானத்தைப் பலவிதத்திலும் பயன்படுத்திக் கொள்வதே. இப்பொழுது ஏற்பட்டுவரும் உலகப் புரட்சியும் இதன் பயனே. கடுகடுப்போடு ஓங்கும் எழுச்சிக்கு ஆசியர்கள் முக்கிய அஸ்திவாரம். வெள்ளையர்கள் தங்களை உயர்வென நினைக்கும் கொள்கையே, இம்மாதிரி வெதுப்புடன் விழித்துக் கொள்வதற்கான, முன்கூட்டியே தெரிந்த உண்மை.

ஆசியா விழிப்புடன் மாத்திரம் நில்லாது, செய்கையிலும் மிக வேகத்துடன் போய்க் கொண்டிருக்கிறது. எப்படி இருப்பினும், அது அடிமைத் தனத்தில் இல்லை. மேனாட்டாரின் நட்பையும் நீக்கிக்கொண்டு வருகிறது. பொருளாதாரத் துறையில் மாத்திரமல்லாமல், வெள்ளையர்கள் தம்மை உயர்வெனக் கொள்ளும் மனப்பான்மையையும் ஒழிக்க வேலைசெய்கிறது. அவர்கள் வியாபாரப் பொருள்களையும், அவர்கள் மதத்தையும் எதிர்க்கிறது.

மேலை நாட்டாரின் பொருள்கள் நன்மையைப்பயக்குமா என்று நோக்குவதைப் போலவே, அவர்களின் சமத்துவம் முதலிய கொள்கைகளை அவர்களே ஏற்று அதன்படி நடக்கிறார்களா என்று கவனிக்கிறார்கள். கிறிஸ்துவக் கொள்கைகள் நடைமுறையில் எவ்வாறு திகழ்கின்றன என்பதையே, கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கூர்மையாகப் பார்க்கிறார்கள். கிறிஸ்தவமதம் போதிப்பது போலவே, மேலை நாட்டார் நடப்பதுமில்லை, நினைப்பில் வைப்பதுமில்லை. கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் கிறிஸ்வரல்லாதவரோடு பழகும்போது, தங்கள் மதத்தைப் பரப்புவதோடு நில்லாமல், தாங்கள் வரும் முன்னரோ, அல்லது பின்னரோ, அல்லது கூடவோ மேலை நாட்டார்களின் சரக்குக் கோட்டங்களும், ராசதந்திரமும், பட்டாளமும், தோன்றத் துணைபுரிகின்றனர். சிலுவையும், மேலைநாட்டானது தொப்பியும் செல்லுமிடமெங்கும் ஆசியர்களின் சுதந்திரம் பாழடைகிறது. இந்த இரண்டையும் விருப்புடனோ, அல்லது கட்டாயமாகவோ ஒப்புக்கொள்வது, கிறிஸ்தவ நாகரிகத்தின் வெற்றியென விளம்

பரப்படுத்தினார்கள். கிறிஸ்தவ மத வெற்றி, அல்லது மேலைநாட்டாரின் நாகரிகத்தின் வெற்றி, மேலைநாட்டார்களின் கப்பற் படைகள் கடலோரத்தில் தோன்றுவதையே ஒட்டி நிற்கும்!

வியாபாரிகளும், மதப் பிரசாரர்களும் பிரிவில்லாத பிணைப்பிலிருந்ததால், அவர்கட்கு நல்ல இலாபம் கிடைத்தது. அஃது, உலகமுழுவதையுமே மேலை நாட்டாரின் குடியேற்ற நிலமாகத் தாழ்த்தி விட்டது. பின்னடைந்தவர்களும், மிகஉயர்ந்த நாகரிகம் படைத்தவர்களும் தங்களுடைய சுதந்திரத்தை இழந்தார்கள். மேலை நாட்டார், இவர்களின் நாகரிகத்தைப் பரிகசித்தனர். அவர்களின் நிறம், நிந்தனையின் அடையாளமாயிற்று. அவர்களின் முற்கால, தற்கால, பிற்காலச் செயலாறுகளைப் புறக்கணித்து வெறுத்தாகள். உலகத்தில் மனிதத் தன்மைக்கு ஒழுங்கு ஏற்படுத்த, வெள்ளையர்களுடன் சேர்வதை இகழ்ந்தாகள். இப்படியிருக்க, மேலை நாட்டு மதஸ்தர்கள், உலக சகோதரத்துவத்தைப் பற்றியும், சாம்ராச்சியங்கள்; மனிதர்களின் உரிமைகளைப் பற்றியும், தத்துவபோதகர்கள், உலக சமத்துவத்தைப் பற்றியும் பிரசாரம் செய்தார்கள்.

ஆசியப் பட்டணவாசிகளில் அநேகர் மனத்திலும், 40 இலட்சம் சிற்றூர்களில் வசிப்பவர்களின் உள்ளத்திலும், கிறிஸ்தவ மதமும், மேலை நாட்டார் என்பதும், ஒன்றையே குறிக்கின்றன என்றும், இவைகளை வேறு வேறு என்று நினைப்பது முடியாத காரியம் என்பதுமான நிலை தோன்றியுள்ளது. இவ்வெண்ணம் சீனக் கூலிகளிடத்திலும், இந்தியக் குடியானவர்களிடத்திலும், மேலை நாட்டவர்களது உள்ளத்திலுங்கூட வேரூன்றியுள்ளது. கிறிஸ்தவ மதம், மேலைநாட்டாரின் சொத்தே. ஒரு மதம், வேறு நாட்டிற்குள் நுழையும்போது, அந்த நாட்டு நாகரிகத்தை எடுத்துக்கொள்கிறது. கிறிஸ்தவ மதம் (Judea) ஜூடியா விலிருந்து பெயர்க்கப்பட்டு, மேலை நாட்டில் வளர்க்கப்பட்டது முதல், அம்மதம் மேலைநாட்டு குணத்தை அடைந்துவிட்டது. அது மேற்கத்திய மதமானதிலிருந்து, உலகத்தில் அதிகாரம் செய்யும் மதமாயிற்று. வெள்ளை அகம்பாவத்தாரின் கொள்ளைக் குணத்தோடு கிறிஸ்தவமதம் பிணைக்கப்பட்டு, அவர்கள் சாம்ராச்சியத்தில் நடைமுறையிலும் இருக்கிறது. அதனால் இதை ஆசியர்கள் வெறுகிறார்கள்.

கிறிஸ்தவரல்லாதார் நாடுகளில், கிறிஸ்தவ மதம் ஆசி



கூறுவதோடுமில்லாமல், கிறிஸ்தவ நாடுகளில் நடக்கும் போர்களுக்கும் ஆசி கூறுகிறது. ஒரு கிறிஸ்தவநாட்டார் மற்றொரு கிறிஸ்தவ நாட்டாரோடு போர்புரிந்துப் படுகொலை செய்யும்போதெல்லாம், அவரவர்களது சர்ச்சுகளின் ஆலய மணிகளை, மிகப்பயபக்தியோடு கொலைக் கருவியாகிய வெடி மருந்துகளுடன் ஒலிக்கின்றார்கள். மனித இனத்தையே அலைக்கழித்து, படுகொலைக் குட்படுத்திய இரண்டு உலகப் பெரும் போர்களையும் மூட்டியது, புத்த மதத்தவருமல்லர், இஸ்லாமிய மதத்தவர்களுமல்லர். தங்களுக்குள் போராடின கிறிஸ்தவ நாட்டார்களே, அவ்விரு போர்களையும் மூட்டினார்கள். முதல் உலகப் போரில் 4 கோடி மக்கள் இறந்ததும், இரண்டாம் உலகப்போரில் 5 கோடி மக்கள் இறந்ததும், இனி அண்மையில் மனித இனத்தில் ½ பங்கு, அதாவது 120 கோடி மக்கள் அணுக்குண்டின் கொடுமையால் துடைக்கப்படப்போவதும், கிறிஸ்தவ நாகரிகத்தைக் காப்பாற்ற ஏற்பாடான, ஒரு சிறு செயலேயாகும். இதை அறிவுள்ள மக்கள் கவனிக்கமாட்டார்களா? வெள்ளையர்களின் ஆதிக்கத்தின் இரட்டைப் பிள்ளைகளான, மேலைநாட்டு நாகரிகமும், கிறிஸ்தவ மதமுமே இதன் காரணமென்று கண்டதன் விளைவே, ஆசியாவில் இவைகட்கு இப்போதுள்ள எதிர்ப்பு.

விஞ்ஞானமும், தொழில் மேம்பாடும் மேற்கத்தியதானாலும், அவற்றை ஆசியா வரவேற்கிறது சுமார் இரண்டாயிரம் வருடங்களாக கிறிஸ்தவர்கள் பற்பல வகையில் முயன்று ஏற்பாடு செய்தும், ஆசியாவில் கிறிஸ்தவ மதம் விசனிக்கத்தக்க நிலைமையில்தான் இருக்கிறது. ஆனால் மார்க்சிசம் மேற்கத்தியதாக இருந்தும், சில தலைமுறைகளுக்குள்ளேயே ஆசியா கண்டத்தில் வேர் ஊன்றி விட்டது இங்கே ஒன்று கவனிக்கவேண்டும்: மேற்கத்திய கிறிஸ்தவ மதம், நமது தீமைகளுக்கெல்லாம் பரலோகத்தைக் காட்ட, கம்யூனிசம் நமது தீமைகளைப் போக்க இவ்வுலகத்திலேயே வழிகாட்டி வருகிறது

உலகப்புரட்சியைத் தூண்டும் கம்யூனிசம், நன்மையளிக்குமா அல்லது தீமையளிக்குமா என்பது தனிப்பட்ட மனிதனின் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. ஆனால் கம்யூனிசம் மிக வேகத்துடன் பரவுகிறது என்பது உண்மை. காட்டுத்தீ போல் உலகத்தைச் சுற்றிக்கொண்டு, பல அதிர்ச்சிகளை உண்டாக்கியிருக்கிறது. ஆசியாவில், மிக விரைவில் விழிப்பு உண்டானதற்

கும், தேசப்பற்று அதிதீவிரமாய் ஏற்பட்டதற்கும், கிறிஸ்தவமதத்திற்குக் கடுமையான எதிர்ப்பு உண்டானதற்கும் கம்யூனிசம் மிக உதவி செய்திருக்கிறது. கிறிஸ்தவ மத எதிர்ப்பு, ஆசியாவில் மட்டுமின்றி, உலகத்திலேயே ஒரு தூண்டுதலை உண்டாக்கிவிட்டது. துன்பம் நம்மை விட்டு நீங்காது எனவும், அத் துன்பம் கடவுளின் திருவிளையாடல், அல்லது விருப்பம் எனவும் உள்ள கோட்பாடுகளை, ஆசிய மக்களின் ஏழ்மை நிலை ஒதுக்கித் தள்ளுகிறதென்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. இம்மாதிரி பரலோக, மறுலோக உதவியைத் தள்ளுவதானது, எல்லா மதங்களையும் மக்கள் புறக்கணிக்கிறார்கள் என்பதையும், ஆசியர்கள் பழமையை விட்டகலுகின்றனர் என்பதையும் தெளிவாக்குகின்றன.

இம்மாதிரி ஆசியா மாறுவது, மேலைநாட்டுப் பெருமைக்கு வெறுப்பாயினும், உலக ஒற்றுமைச் சங்கத்திற்கு அநுகூலமாக இருக்கிறது. மேலை நாட்டான், கீழ்நாட்டான் என்ற வேற்றுமையும் நீங்கி, மதத்தின் பேரால் சிறிய தொகையினர் மட்டும் பலனடைவது நீங்கி, பெருங்குடி மக்கள் யாவரும் செழிப்புற வழி பிறக்கும்.

பழங் கோட்பாடுகளையும், மதங்களையும் மதியாததால் மனிதர்கள் மந்தைக்கூட்டங்கள்போல நடக்கும் இருட்டுச் சகாப்தம் தோன்றிவிடுமா? இதை இரண்டு விதத்திலும் வாதிப்பார்கள் கிறிஸ்தவ மதம், அல்லது பொதுவில் மதமும், நாகரிகமும் பிரிக்கக்கூடாதவையன்று. கிரேக்க நாடும், ரோம நாடும் கிறிஸ்தவ மதம் தோன்றுமுன் பிரகாசித்தன.

ஆசியா, ஆப்பிரிக்க மக்கள் விழிப்படைவதால், யாரும் அஞ்சவேண்டியதில்லை என்பதையும், எல்லா மக்களும் நட்போடு வாழ்வார்கள் என்பதையும், ஃபிரான்சு, அமெரிக்கா, ரஷ்யப் புரட்சிகள் தெளிவாக்குகின்றன.

ஆசியாவும், மேலை நாடுகளுடன் பழைய வெறுப்புக்களைக் காட்டி வந்தால், உலகப் போர் கட்டாயம் ஏற்படும். வெறுப்பு, வெறுப்பையே உண்டாக்கும். மனிதனின் உயர்ந்த குணமாகிய பகுத்தறிவை யழித்து, முடிவில் போரையும், துன்பத்தையுமே உண்டுபண்ணும்.

நல்ல எழுத்தாளர்கள் தம் வாழ்நாளில் தூற்றப்படுகிறார்கள்; இகழப்படுகிறார்கள். இறந்த பிறகு போற்றப்படுகிறார்கள்; புகழப்படுகிறார்கள்.

—வால்டேர்.

வரலாறு :

# அறிஞர். மார்ட்டின் லூதர்.

"பிறர் சொல்வதை அப்படியே நம்பாதே: அதை ஆராய்ந்து பார்த்து எது உண்மை என்பதைத் தெரிந்துகொள்" என்ற கருத்தை பதினைந்தாம் நூற்றாண்டில் உலகுக்கு எடுத்துச்சொன்னவர் மார்ட்டின் லூதர். இவர் 1483ம் ஆண்டு, நவம்பர் 10ம் தேதி அன்று, ஜெர்மனியில் உள்ள துரிஞ்சர் என்னும் கிராமத்தில் பிறந்தார். தந்தை ஒரு ஏழை விவசாயி: சிறுவயதில் லூதர் துள்ளிவிளையாடியதாகத் தெரியவில்லை. அவரது குழந்தைப்பருவம்: துன்பம் நிறைந்ததாகவே இருந்தது. தன் ஊரிலும் பிறகு (ESLEBEN) ஈஸ்லெபென் என்ற ஊரிலும் லூதர் கல்வி பயின்றார். பள்ளிஆசிரியர்கள், இவரிடம் கொடுமையாகவே நடந்து கொண்டனராம். எப்படியோ கஷ்டப்பட்டு, லூதர் 1501ம் ஆண்டில் (ERFURT) எர்ஃபர்ட் கலாசாலையில் சேர்ந்தார். ஏழையே ஆயினும், தன் மகன் சட்டம் பயில வேண்டுமென லூதரின் தந்தை விரும்பினார். ஆனால் லூதரின் உள்ளம் மதத்தையே விரும்பியது. 1505ம் ஆண்டில் லூதர், மதத்துறையில் M.A. பட்டம் (THEA LOGY) பெற்றார்.

பட்டம் பெற்ற லூதர் எர்ஃபர்ட், நகரிலுள்ள (ST. AUGUSTIN MONASTERY) ஞானி அகஸ்டின் துறவோர் மடத்தில் சேர்ந்துவிட்டார். இங்கேதான் அவர் மதநூல்களைப் பெரிதும் ஆராய்ந்தார். பைபிளுக்கும், போப்புக்கும் உள்ள தொடர்பு எவ்வகைப்பட்டது என்று அறிந்தார். பக்தி என்பது ஒருவன் செய்யும் யாத்திரைகளின் எண்ணிக்கையிலோ, அல்லது வெளி வேஷத்திலோ இல்லையென்றும், உண்மையிலும், அன்பிலுமே உள்ளது என்றும் கண்டறிந்தார். அப்போது கொஞ்சம் கொஞ்சமாக, லூதருக்கு போப்பின் தன்மைகள், வஞ்சகச் செயல்கள் தெரிய வந்தன. 1511ம் ஆண்டில், போப்பின் வாழ்விடமான ரோம் நகருக்கு லூதர் சென்றார். போப்பின் கொடுஞ்செயலை நேரிலேயே பார்த்தார். அந்த நகரில் எராஸ்மஸ் (ERASMUS) என்பவர் எழுதிய சட்டைப்பை குத்துவாள் (POCKET DAGGER) என்ற புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு லூதருக்குக் கிடைத்தது. இப்புத்தகமே லூதரின் மறுமலர்ச்சிக்கு வித்து ஊன்றியது. சிந்தித்தார். அறிவு உரம் பெற்றது.

1512ம் ஆண்டில், லூதர் வாழ்வுக்காக விட்டன்பர்க் (WINTEN BURG) கலாசாலையில், மதப் பேராசிரியராகப் பதவி ஏற்றார். ஐரோப்பிய மறு

மலர்ச்சி இயக்கத்தின் விடிவெள்ளியான இக்கலாசாலை, லூதருக்கு (DOCTOR OF HOLY SCRIPTURES) பரிசுத்த வேத நூலறிஞன். என்ற பட்டத்தையும் அளித்தது. இந்த நேரத்தில், போப்பின் தூதரான, டெட்சல் (TETZEL) என்னும் முனிவர், பாவ மன்னிப்புச் சீட்டுகளை விற்க, ஜெர்மனிக்குள் வந்தார். இதைச் சீட்டை வாங்கினால், தங்கள் பாவங்கள் தொலையும் என்ற மூடநம்பிக்கையில் மூழ்கி எழுந்த மககள், ஏராளமாக அந்தச் சீட்டுக்களை வாங்கினர். இதைக்கண்ட லூதரின். அறிவு உள்ளம் கொதித்தது. 'இந்த அநீதியை நிறுத்துவேன்' என்று சபதம்பூண்டார். "பாவ மன்னிப்புச் சீட்டுகளை வாங்காதீர்கள்; அது ஒரு பித்தலாட்டம்" என்று மக்களிடையே லூதர் பிரசாரம் செய்தார். ஜெர்மன் மொழியில், மிக அழகாகப் பேசும் திறமையுள்ள லூதர், தன் கருத்துக்கு ஏராளமான காரணங்களை—ஆதாரங்களை—எடுத்துக் காட்டினார். பேச்சோடு மட்டும் லூதர் நிற்கவில்லை. 1517. அக்டோபர் 17-ம் நாள் காலை, லூதர் விடென்பர்க் சர்ச்சின் கதவிலே, பாதிரி டெட்சலுக்கு, "மாமுனிவர் டெட்சலே! பாவ மன்னிப்புச் சீட்டுகள் பயனற்றவை என்பதுபற்றி, உம்மோடு பேச்சின் மூலமோ, அல்லது எழுத்தின் மூலமோ விவாதிக்க நான் தயார்" என்று ஓர் அறைகூவலை எழுதி ஒட்டினார் லூதர். அவர் தன் கருத்துக்கு 95 காரணங்களை துணைக்கொண்டார். மக்கள் விழித்துக்கொண்டனர். ஆகவே அந்தச் சீட்டுக்கள் விலையாகவில்லை. எனவே போப்புக்கு பணம் சேரவில்லை. இதைக்கண்ட போப் கொதித்தெழுந்தார். லூதரை எச்சரித்தார், பயனில்லை. தங்க ரோஜா ஒன்றை அன்பளிப்பாக அனுப்பினார். வாங்க மறுத்துவிட்டார் லூதர். அந்த நாளிலே அதனை மறுப்பதென்பது எவரும் எண்ணத் துணியாத ஒன்று.' 1520 ஜூன் மாதத்தில், போப், லூதருக்கு எதிரடையாய் (BULL OF EXCOMMUNICATION) திருச்சபையினின்றும் தள்ளப்படுதல் உத்தரவைப் பிறப்பித்தார். ஆனால் லூதர், அந்த உத்தரவைப் பொது மேடையில், மக்களின் முன்பு பகிரங்கமாய் எரித்தார். அப்போது போப் பத்தாம் லியோ அரசன் உதவியை நாடினார். லூதரின் கொள்கையால் ஜெர்மன் நாடு முழுதும் பரபரப்பு ஏற்பட்டது. உடனே அரசன் ஐந்தாம் சார்லஸ், அறிஞன் லூதரைப் பார்லிமெண்டுக்கு அழைத்தான். போகவேண்டாம், நீ உயிரோடு திரும்பமாட்டாய் என்று நண்பர்கள் தடுத்தனர். ஆனாலும் லூதர் நிற்கவில்லை. 17-4-1521 ல் (DIET) டைட் என்னும் பார்லிமெண்டில், தன் கருத்துக்கள் சரியென்று தக்க ஆதாரங்களோடு, வெகுதிறமையாக வாதாடினார். உயிரோடு வெளியே வந்தார். ஏராளமான மக்கள் கூட்டம் அவரை வரவேற்றது. பிரபுக்கள் கூட்டம் கொதித்தது. லூதர் திடீரென மறைந்தார்.

மறைந்து வாழும் லூதர், தனது நண்பர் பெடரிக் என்னும் பிரபுவின் உதவியால் "THE LIBERTY OF A CHRISTIAN MAN" ஒரு கிறிஸ்துவனின் உரிமை "TO THE CHRISTIAN NOBILITY OF THE GERMAN NATION" ஜெர்மன் இனத்தின் கிறிஸ்துவப் பிரபுத்துவத்திற்கு என்ற பக்கங்களை வெளியிட்டார்.



கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் தரகராக ஒரு போப் தேவையில்லை என்றார். "மதம் ஒவ்வொருவனுடைய தனிப்பட்ட சொத்து, அதற்கும் அரசியலுக்கும் தொடர்பு கூடாது" என்றார். இவற்றின் பயனாக, 8-5-1521ல் லூதரின் உயிர், உடல், அவரது எழுத்துக்கள் அனைத்தும் சட்டவிரோதமாக்கப்பட்டன. அவருக்கு உணவோ, அல்லது தங்க இடமோ கொடுப்போருக்குத் தண்டனை என்றும் அறிவிக்கப்பட்டது. சற்று அமைதியாய் இருந்த லூதர், அப்பொழுதுதான், பைபிளை ஜெர்மன்மொழியில் மொழி பெயர்த்தார். இந்த மொழி பெயர்ப்பு, ஜெர்மன் மொழியின் உரை நடைக்கு வித்து ஊன்றியது எனலாம்.

லூதர் அமைதியாக வாழ்ந்தாரே தவிர, மக்கள் வாழவில்லை. போப் பத்தாம் லியோவுக்குப்பின் வந்த ஏழாம் கிளெமெண்ட் (CLEMENT VII), மூன்றாம் பால் இவர்களின் கொடுமை தாங்காது மக்கள் கிளர்ச்சி செய்தனர். மதப்போர் ஆரம்பமாகியது. 9-4-1522-ல் லூதர் இரகசியமாய் விடென்பர்க் சென்று, (ALL SAINTS) ஆல்செயின்ட்ஸ் என்ற சர்ச்சில், ஓர் கூட்டத்தில் பேசி, மக்களிடையே சமாதானம்செய்ய முயன்றார். பயனில்லை. கத்தோலிக்கர்களும், மறுமலர்ச்சி இயக்கத்தவர்களும், கத்தியேந்தி 1525-ல் போர்புரிந்தனர். தன் இயக்கத்தால் மக்களிடையே கலகம் ஏற்பட்டது கண்டு லூதர் வருந்தினார். ஆனால் அவர் வெளியே வர இயலவில்லை! அறிஞர் மார்ட்டின் லூதர், மறுமலர்ச்சி இயக்கத்தின் விடிவெள்ளி. புராட்டெஸ்டண்ட் (PROTESTANT) இயக்கத்தின் தந்தை, அரசனின் கொடுமையால் 25 ஆண்டு மறைந்தே வாழ்ந்து 17—2—1546ல் தமது 63ம் வயதில் உயிர் நீத்தார்.

அறிஞர் மார்ட்டின் லூதர். உறுதியான உள்ளம் படைத்தவர். கருத்தோடு பேசும் இயல்பினர். "ஆயிரக் கணக்கான பேய்கள் என் முன் வந்து என்னைப் பயமுறுத்தினாலும், என் கருத்து சரியானது, சரியானது என்றுதான் சொல்லுவேன்" என்று போரரசன் முன்னிலையில் கூறிய வீரர், எதற்கும் கலங்காத எஃகு இருதயம் கொண்டவர், வாழ்க அவர் புகழ்!

—ப. சிவப்பிரகாசம் B. A.

## மதக் கல்வி.

மதக் கல்வியின் பெயரால் மேல் நாடுகளிலே, பைபிளில்இருந்து சில கதைகள் போதிக்கப்படுவதுபோல், நம் குழந்தைகளுக்கும் புராணங்களில் இருந்தும், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் இருந்தும் சில கதைகள் போதிக்கப்படலாம். இவைகள் பெயருக்குத் தான் புண்ணிய கதைகளே ஒழிய, இவற்றின் கருத்துக்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு விரோதமாகவும், மூடநம்பிக்கையின் இருப்பிடமாகவுமே இருக்கும். இவைகள் மனித சமூக முன்னேற்றத்தைக் குலைப்பன. இவைகள், மேலான தத்துவங்கள், தெய்வத்தன்மைகள் கொண்டவைஎன்று எவ்வளவுதான் சொன்னாலும், இவற்றில் மலிந்துகிடக்கும் இயற்கைக்கு மாறுபட்ட செய்திகள, லட்சியங்கள், எப்படியும் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை—சிந்தனைசக்தியைக் கெடுத்தே தீருகின்றன.

—டாக்டர். ஆர். பி. பராஞ்சிபை.

# சிரிக்காதே!

(இராமநாதனின் தந்தை கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்புகையில், வண்டி கவிழ்ந்து மண்டையில் பலத்தகாயத்துடன் வீட்டுக்கு வந்தார்.)

**இராமநாதன் :—** ஏன் அப்பா! கோயிலுக்குப் போய் ஆண்டவனை வணங்கிய பலனா இது?

**தந்தை :—** சட்! அதிகப்பிரசங்கி! என் தலைவிதிக்குக் கடவுள் என்னடா செய்வார்?

(அதே சமயம், இராமநாதனின் தம்பி பரமசிவத்தை இருவர் தூக்கி வருகின்றனர்.)

**ஒருவன் :—** தம்பி, பிரேக் இல்லாத சைக்கிள்லே போயி, ஒரு வண்டியிலே மோதி, விழுந்துடிச்சிங்க. கால்லே பெரிய காயம்!

**தந்தை :—** முட்டாள் பய! ஒழுங்கா ஓட்டத் தெரிஞ்சால்ல சைக்கிள் ஏறணும்!

**இராமநாதன் :—** அதுக்கு அவன் என்னப்பா செய்வான்! அவன் தலைவிதி.

—ச. இராமநாதன்,
கடத்தாம்பட்டி.

---

**மணி :—** இரத்தினம்! இன்னைக்கு "ஆனித் திருமஞ்சனம்" நடராஜர் கோயிலில் விசேஷம். நான் சாமி பார்க்கப் போகிறேன். வருகிறாயா?

**இரத்தினம் :—** நான் வரல்லே என்னிடம் ரெண்டணா தபால் ஸ்டாம்பு இருக்குது; அதிலியே நடராஜரைப் பாத்துக்கிறேன்.

**மணி :—** அட! அது வெறும் சித்திரமடா!

**இரத் :—** அட! அது வெறும் கல்லுடா!

—சி. என். அபிப்.

**1-வது மூட்டைப்பூச்சி :—** என்ன அண்ணே! இந்தக் கூரை ஊட்டுக்குவந்து ரெண்டுநாள்தானே ஆவுது? அதுக்குள்ள எடத்தை மாத்தணும்கிறியே!

**2-வது மூட்டைப்பூச்சி :—** போப்பா! இங்கெ என்ன கெடக்குது? ரெண்டுநாளா பட்டினி! அதோ தெரியுதே அந்த மாடி வீட்டுக்காவது போய்ப் பிழைக்கலாம்னுதான்.

**1-வது மூட்டைப்பூச்சி :—** அதுக்குப் பக்கத்திலே இருக்குதே சங்கராச்சாரியார் மடம். ரெத்தம் அங்கெ நெறையா கெடைக்குமண்ணே!

—அ. இ. வரதராசன், அரங்கனூர்.

---

**புரோகிதர் :—** (திருமண வீட்டில் பெண்ணைப் பார்த்து) அம்மி மிதித்து அருந்ததி பார்த்தாயோ பெண்ணே?

**பெண் :—** பார்க்கலையே.

**புரோ :—** பார்த்தேன்னு சொல்லும்மா.

**பெண் :—** இல்லையே. அந்த சினிமா இன்னும் எங்க ஊருக்கு வரவில்லையே!

டி. கே. குருநாதன்.

---

**தந்தை :—** கங்கையிலே குளிச்சா செய்த பாவமெல்லாம் தொலையுண்டா, நல்லா முழுகிக் குளிடா?

**மகன் :—** நான் மாட்டேப்பா! இதுக்குமுன்னாலே குளிச்சவங்க பாவமெல்லாம் இங்கெ தானே இருக்கும்? அதெல்லாம் எம்மேலே ஒட்டிக்குமே!

—கே. கந்தசாமி,
தஞ்சை இடையாறு.

# வாழத் தகுதியற்றவள்.

மா. முத்துசாமி.

★

ஆவுடையப்ப முதலியார் என்றாலே அந்தப் பக்கத்தில் அலாதி மரியாதை. காரணம் அவர் கணக்கற்ற பணத்தைக் குவித்திருந்ததால் மட்டுமல்ல. அந்த ஊர்ப்பக்கம் உள்ள அரைக்காணி, ஒரு காணி நிலம் உள்ளவர்களுக்கு, கோர்ட், கல்யாணம் முதலிய அவசரச் செலவுகள் ஏற்படும் போது, தாமாகவே கூப்பிட்டு, அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவுவார். கடைசியில் நிலம் அவருடையதாகும். ஏழைக்கு உதவும் ஏந்தல் என்று ஊரார் அவரை மதித்தனர். கஷ்டத்தில் உதவும் கருணையாளர்என்று கருதினர். கணக்கற்ற செல்வமும், கழனிகளும், காரும், பெரிய பங்களாவும், காரியங்களைக் கவனிக்க ஆட்களும், காசில்லாமல் உழைக்கும் ஏழைகளும் சூழப்பெற்று, பெருமையுடன் வாழ்ந்துவந்தார் முதலியார்.

அழகேசன் அவரின் அருமை மகன். பையன் பட்டிக்காட்டில் படிப்பது இழிவு என்று கருதி, 10 வயதிலேயே பட்டணத்துக்கு அனுப்பிப் படிக்கவைத்தார் முதலியார். கல்லூரியில் கற்றுத்தேறி, சட்டப் பரீட்சையிலும் வெற்றி பெற்று, வழக்கறிஞர் சின்னத்துடனும், வாலிபப் பருவத்துடனும் ஊர் வந்து சேர்ந்தான் அழகேசன்.

## 2

பங்களாத் தோட்டத்தின் மூலையில் ஓர் குடிசை. கதிர் சாய்ந்து நிற்கும் காடுகளுக்கு இடையில், "கண் பார்வை"க்காக கட்டிவைத்த பொம்மைபோல், பங்களாவின் மீது பார்வை விழாமல் இருக்கட்டும் என்று கட்டிவைத்த குடிசையாகத் தோற்றமளித்தது அது. பங்களாவில் பணிபுரியும்—ஏழ்மையின் சின்னமாகிய—கந்தன் அதில் வசிக்கிறான்.

சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த சிருங்காரக் கட்டில்களையும், மெத்தைகளையும், வெல்வெட்டுகளையும், தேவைக்கு மிஞ்சியதுமான எத்தனையோ பொருள்களையும் தினமும் கந்தன் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றான். துடைத்து மெருகு கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றான். ஆனால், அவைகளைப்பற்றி, அவன் எண்ணியதெல்லாம், "கொடுத்து வைத்த புண்ணியவான், ஐசுவரியத்துடன் வாழ்கிறார். நாம் செய்த பாவம், நம் விதி, இப்படி இழி நிலையில் இருக்கிறோம்" என்பது தவிர வேறில்லை. கடவுளின் பெருமையையும், கர்ம வினைகளையும்பற்றி, புராணிகர்கள் கூறக் கேட்டுப் பரவசமடைந்தவன் கந்தன்! பாடுபடுவதும், பழயதை உண்பதும்—பழம் பாயில் உறங்குவதுமே அவனது நித்திய வாழ்க்கை. செல்லம் கந்தனின் ஒரே மகள். தாயை இழந்தவள். தகப்பனின் அன்பைப் பூரணமாகப் பெற்றவள். ஏழையின் மகள்தான்

எனினும் அறிவும், அழகுமே உருவானவள். தனது மகன் படிப்பதால் பரவசமடையும் முதலியாரைக் கண்ட கந்தன், தனது உழைப்பு உயிர், அன்பு, எல்லாவற்றிற்கும் உரியவளான தன் செல்லத்தை உள்ளூர்ப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவைத்தான்.

ஐந்து வகுப்புக்களைப் படித்து முடித்தாள். தகப்பனுள்ளம் மகளின் கல்வித் திறமைகண்டு கவலையடைந்தது. கருணைக்கடல் முதலியாரிடம், செல்லத்தின் மேல்படிப்புப்பற்றிக் கூறினான். உதவி வேண்டினான். அவர் முகத்தில் ஏளனம் தாண்டவமாடிற்று. "ஏண்டா கந்தா? மகளைப் படிக்கவைத்து எந்த மகராசன் வீட்டிற்கு அனுப்பப் போகிறாய்? பொட்டச்சிக்குப் படிப்பு ஒரு கேடா? போடா போ! போய் வேலையைக் கவனி" என்று கூறித் துரத்தினார். அதன் பிறகு அவன் அதைப்பற்றி எண்ணியதேயில்லை.

## 3

ஆண்டுகள் சில சென்றன. பருவம் செல்லத்தைத் தங்கப் பதுமையாக்கிற்று. ஆரம்பப் பள்ளியே அவள் அறிவை ஆராய்ந்து பார்க்கும் அளவுக்கு வளர்த்துவிட்டது. பருவத்துடன்; பகுத்தறிவு நோயும், சீர்திருத்த வேட்கையும் வேறு பற்றிக்கொண்டன. தகப்பன் பாதுகாக்கும் பங்களாத் தோட்டத்தில் தனக்கே உரிமை அதிகம் என்று, துள்ளி விளையாடும் புள்ளிமானாகத் திரிந்துவந்தாள் செல்லம்.

மாலை வேளை, இளம் தென்றல், பூக்களின் மணம். காபி குடித்துவிட்டுக் காற்றுவாங்க தோட்டத்தில் சுற்றிவந்தார் வழக்கறிஞர் அழகேசன். "பிளேயர்ஸ்" சிகரெட்டின் புகையும், மெல்லிய ராகமும் வாயிலிருந்து வெளியேவர, கவனத்தைப் பல பக்கங்களிலும் செலுத்திக்கொண்டே நடந்தார். மாந்தளிர் ஒன்றைக் கையில் வைத்து ஆட்டிக்கொண்டு, நாடோடிப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டிருந்த செல்லம், அரவம் கேட்டுத் திரும்பினாள். சின்ன முதலியார் வந்திருப்பது அவளுக்குத் தெரியாது. புது ஆள்: கண்டதும் ஓடி மறைந்துவிட்டாள். தகப்பனைக் கேட்டுத்தான் தகவல் தெரிந்துகொண்டாள் குடிசையில்.

கந்தனுக்கு ஒரு மகள் இருப்பது சிறு வயதில் அழகேசனுக்கு, நன்கு தெரியும். ஆனால் அதைப்பற்றி அவன் எண்ணியதே இல்லை. அவன் புரிந்துகொண்டான் அவள் கந்தன் மகள் என்று. பட்டணத்து நாரிமணிகளைப்போல், பட்டிக்காட்டுப் பெண்களும் அழகாய் இருப்பார்கள் என்பதை உணர்ந்தான் அழகேசன்.

## 4

மறுநாள் மாலை, "கந்தா!" என்ற புதுக்குரல் கேட்டுத் திரும்பினாள் செல்லம், புரிந்துகொண்டாள் யார் என்பதை. சற்று மலைத்தாள். பதில் கூறியாகவேண்டுமே! துணிவு பிறந்தது. "அவர் இந்த நேரத்தில் இங்கிருக்கமுடியாது என்பது தெரியாதா?" என்று கேட்டாள்.

"நன்றாகப் பேசுகிறாயே!" என்று நாசூக்காகக் கூறிவிட்டு, "நீ யார்?" என்றும் கேட்டான். "எங்கள் அப்பாவின் மகள்!" என்றாள் செல்லம்.



"ஓஃகோ! அப்படியா? உங்கப்பா எங்கிருக்கிறாரோ?"

"பட்டணத்துக்குக்காரர்களுக்குப் பகலில்கூட கண் தெரிவதில்லை போலும்!" என்றாள்.

"ஏன்?" என்றான்.

"கண் தெரிந்தால் பங்களாவில் பார்த்திருக்கலாமே!" என்று கூறிக்கொண்டு, சென்று மறைந்தாள் செல்லம். அவன் திகைத்தான்! இடையில் விழிகள் பேசிக்கொண்டன.

## 5

மறுபடியும், மறுபடியும் சந்திப்பு நிகழ்ந்தது. அழகேசனின் ஆசைமொழிகளைக் கேட்ட செல்லம், சிந்தனையைச் சுழலவிட்டாள். பணக்காரர்கள் என்றாலே பச்சோந்திகள் என்பது அவளது முடிவான எண்ணம். இருந்தும் அழகேசன் ஏனோ அவளுக்குக் கசக்கவுமில்லை, இனிக்கவுமில்லை.

செல்லத்தின் நோக்கத்தைச் சிறிது சிறிதாக உணர்ந்த அழகேசன், சீர்திருத்தவாதியானான்—சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த. சீர்திருத்தப் பேச்சுக்களில் சிக்குண்டாள் செல்லம். காதல் மொழிகளில் கலங்கினாள். மனம் ஒரு நிலையிலில்லை. நம்பலாமா என்ற கடைசி முடிவுக்கு வந்தாள்.

கலப்பு மணம், அதிலும் ஏழைப் பெண்ணை மணப்பது, இதுவே எனது வாழ்க்கையின் லட்சியம் என்றான் அழகேசன். "நம் போன்றார் முன் வந்தால்தான், நமது சமூகமும், நாடும் முன்னேற்றமடையும்" என்று ஒரு சுருக்கமான சொற்பொழிவாற்றினான்.

சீர்திருத்த முழக்கம் கேட்ட செல்லம் நம்பினாள். மனம் ஒப்பினாள், பிறகு...இன்ப முத்தங்கள் பிறந்தன! பின்னர், இப்படியாக எத்தனையோ இன்பப் பரிமாறல்கள்! இணைப்புகள். காலம் அவளது மேனியில் புது விநோதம் செய்தது. பொன் மெருகு கொடுத்தது. ஆம்! செல்லம் ஒரு கர்ப்பவதி!

அழகேசனின் சந்திப்பு ஏனோ குறைந்தது. அதே சமயத்தில் திடீரென்று அவனுக்கு உதவி நீதிபதி உத்தியோகமும் கிடைத்தது. எனவே ஊரை விட்டுச் சென்றான்.

## 6

செல்லத்தின் நிலை? அவள் கசக்கிய மலர். வயிற்றில் வளரும் குழந்தை, "அவள் கற்பழிக்கப்பட்ட கன்னி" என்பதைக் கந்தனுக்குக் காட்டிற்று. வெளியிலும் தெரியவந்தது. செல்லம் மறைக்கவில்லை. முழுதும் கூறிவிட்டாள் தன் தந்தையிடம். "மானம் பெரிதென்று வாழ்ந்த எனக்கு, மாசு தேடித்தந்த மாபாவி! பெண்ணா நீ? பேய்! அறிவுள்ளவள் என்று உன்னை நம்பினேன்; அழிவைத் தேடித்தந்த பழிகாரி! பெற்ற மகள் என்பதற்காக உன்னை உயிருடன் விடுகிறேன். உனக்காக உழைத்துச் சேர்த்து, செய்துபோட்ட 10 பவுன் நகைகளையும், மீத்துவைத்த ரூ. 200 ஐயும் எடுத்துக்கொண்டு, எனது கண் காணாமல் சென்று மறைந்து போ, தொலை! சீக்கிரம்......மீண்டும் கண்டால்......நான் ஒரு கொலைகாரனாவேன்!" என்று துரத்திவிட்டான் கந்தன்.

கால்கள் சென்ற வழி நடந்தாள் செல்லம். வாழ்வதா — சாவதா என்ற பிரச்சினைக்கு முடிவு காண இயலாமல் தவித்தவண்ணம் சென்றாள்.

விபசாரிப் பட்டம் பெற்று, மீண்டும் இச்சமூகத்தில் வாழ நமக்கு என்ன தகுதி? ஏன்? என் வாழ்வையே வரண்ட பாலைவனமாக்கி, எனக்கு விபசாரிப் பட்டத்தை வாங்கிக்கொடுத்தவன் கம்பீரமாக—கண்ணியமாக—வாழ, நான் மட்டும் சாவதா? இல்லை, சாகத்தான் வேண்டும்; ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி வழக்கும் சமூகத்தில் என் போன்ற அபலைகளுக்கு இடமில்லை.

ஏன்?

குந்திதேவி—கன்னியாக இருந்த பொழுதே கர்ணனைப் பெற்று, மீண்டும் மகாபாரதமே ஏற்படுகிற அளவுக்கு, பஞ்சபாண்டவர்களைப் பெற்று, பெருமையுடன் வாழவில்லையா? பின் நான் மட்டும் வாழக்கூடாதா? ஆம்! வாழத்தான் வேண்டும். மேலும் அவர் மனம் ஒரு காலத்தில் மாறினும் மாறலாம்—என்று பலவாறு உழன்று, கடைசியில்—வாழ்வின் கடைசி நம்பிக்கையுடன் செல்லம் வேற்றூரில் சென்று குடியேறினாள்.

7

அன்று ஒரே அமர்க்களம். எங்கும் முதலியார் வீட்டுத் திருமணப் பேச்சுதான். கணக்கற்ற பேர்கள் பரிசுகள் வழங்க, உடன்பயின்ற தோழர்கள சீர்திருத்தச் செம்மல் என்ற வாழ்த்துரைகள் வழங்க, ஆவுடையப்ப முதலியார் மகன் சப்-ஜட்ஜ் அழகேசனுக்கும் — செல்வபுரி கதிரேச முதலியார் மகள், காந்தா B. A. வுக்கும கடிமணம் நிறைவேறிற்று.

ஆனால் அங்கே......?

ஊரெல்லாம் ஒரே கசுமுசுப் பேச்சாக இருந்தது. "கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறுகூடக் காணவில்லை—வாழ்கிறாள் பார்" என்று பேச்சுக்கு விஷயம் அகப்படாமல் தவித்த பெண்கள் பேச ஆரம்பித்தனர்.

"மஞ்சள் கயிறு" எவ்வளவு ஆபாசமான செயல்களையும் மறைக்கும் திரை! கற்பை இழப்பினும் கயிறு கழுத்தில் ஏறிவிட்டால் எல்லாம் மறைந்துவிடுகிறது. கனவான்கள், தனவான்கள் வீட்டுப் பெண்ணு?க்கற்புப் போய்விட்டாலும் காசுக்காகவாவது காளையர் கூட்டம் வந்து மோத, பிறருக்குத்தெரியாமல் பெருமையுடன் மறைக்க! இங்குதான் அடுத்தவேளை உணவிற்கே வழியைக் காணோம். செல்லம் பணக்காரியாயிருந்தால் திருமண வாய்ப்பு கிட்டும். இவளோ ஏழை, மஞ்சள் கயிறு எங்கே கழுத்தில் ஏறப்போகிறது; கற்பு திரும்பப்போகிறது? செல்லம் மனதைக் கல்லாக்கிக்கொண்டு காலம் கழித்தாள் கையில் உள்ள காசைக்கொண்டு.

மாதங்கள் சில விரைந்து சென்று மறைய, செல்லம், இன்னல்களுக்கிடையில் ஒரு தாயானாள்! ஒருதலைக் காதலின் சின்னமாக — விபசாரி என்று உலகிற்கு விளம்பரப்படுத்தும் பொம்மையாக—தோன்றியது குழந்தை—அதுவும் ஒரு பெண்!

மாதங்கள் மூன்று மறைந்தன. ஊரில் ஏசல்பேச்சுக்கள் எல்லை மீறி



விட்டன. கண்டவரின் ஏசல் மொழிகளாலும்—சமூகத்தின் விரோதத்தாலும்—சுருங்கச் சொல்லின் தனது அறியாமையினாலும், செல்லம் சீரழிந்து, இளைத்துத் துரும்பானாள்—இளமைக் கிழவியானாள்.

ஊரில் உள்ள கற்புக்ரசிகளின் பேச்சு வளர்ந்து, ஆண்களும் தலையிட்டு, ஊர்த்தலைவர் மணியக்காரர் காதுக்கும் எட்டியது. விபசாரிக்கு நமது ஊரில் வேலை என்ன? ஊதாரியை உதைத்துவிரட்டுங்கள். சமூகத்திற்கே இம்மாதிரி சண்டாளிகளால் அவமானம். இதுவரை என்னிடம் ஏன் கூறவில்லை?" என்று சீறினார். பிறகு கேட்கவா வேண்டும்...செல்லம் விரட்டப்பட்டாள்.

அட நன்றிகெட்ட நாடே! என்னுடைய சுயமுயற்சியில் நான் உயிர் வாழ்வதுகூடவா உனக்குப் பொறுக்கவில்லை? சண்டாளர்கள் பலர் உலவுகிறார்கள்—அதைப்பற்றி உனக்குக் கவலையில்லை. அபலை—அனாதை, நான் வாழ்வது உனக்குப் பிடிக்கவில்லை! ஏ! பாழும் சமூகமே! என் போன்ற அபலைகள் இன்னும் எத்தனைபேர் உன் கொடுமைக்குப் பலியாகவேண்டுமோ? குடி—உன் பசி அடங்குமட்டும் இரத்தமாகக் குடி! இனி நாங்கள் வாழத் தகுதியற்றவர்கள், வருகிறோம். என்று கூறிக்கொண்டு குழந்தையை முத்தமிட்டாள். கண்ணே! கடைசி நிம்மதி—நீண்ட நிம்மதிபெறத் தயாராக இரு, என்று குழந்தையைக் கிணற்றில் வீசினாள். தானும் குதிக்கத் தயாரானாள். திடீரென்று இரு கைகள் கெட்டியாய்ப் பிடிக்கவே திடுக்கிட்டுத் திரும்பினாள். போலீஸ்!

"குழந்தையைக் கொன்று, தானும் தற்கொலை செய்துகொள்ள முற்பட்டாள்" என்று குற்றம் சாட்டப்பட்டாள் செல்லம்.

சப்-ஜட்ஜ் அழகேசன், அழகாகத் தனது பீடத்தில் அமர்ந்து, வக்கீல்களுடன் வம்பளந்துவிட்டு, கேசுகளைத் தொடங்கினார்.

செல்லம் கூண்டில் நிறுத்தப்பட்டாள். சுருக்கமாகக் கூறின்; அவள் இருந்த நிலையும், அவர் இருந்த நிலையும், ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள இயலவில்லை. தீர்ப்பு: இம்மாதிரி இளமையில் தாந்தோன்றித்தனமாகச் சுற்றி, தங்கள் வாழ்க்கையையும்—ஆண்களின் பெருமையையும்—சமூகத்தின் சிறப்பையும் குட்டிச்சுவராக்கும் பரத்தையரை நன்கு தண்டிக்கவேண்டும். முதல் குற்றம் விபசாரம், இரண்டாவது குழந்தையைக் கொன்ற கொலைகாரி, மூன்றாவது தற்கொலை செய்துகொள்ள முயன்றது, ஆகிய மூன்று குற்றங்களுக்காக, பெண் என்பதால், மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

செல்லம் — சாகக்கூட உரிமையிழந்த ஏழைச் செல்லம்—வாழத் தகுதியற்ற செல்லம்—குற்றவாளியாகச் சிறையில் கிடக்கின்றாள். தன் நிலையை எண்ணி இரத்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

அழகேசனும், அவரது அருமை மனைவியும் "நமது சமூகம்" என்ற நாடகம் பார்க்க இன்பமாகப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறார்கள்

0000
182314

# கருத்துரை

## முல்லைநாட்டு இளவரசன்.

(ஆசிரியர்: C.S. அறிவழகன், வெளியிட்டோர்: சந்திரா பதிப்பகம். சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி.)

ஆரியத்தின் கேட்டினையும், சாம்ராச்சியச் சரிவினையும் விளக்கும் முறையில் அமைந்த ஒரு கற்பனை நாடகம். நடையிலே வேகமிருக்கிறது. சில கட்டடங்கள் மிக்கஉயர்வு. நம்பமுடியாத நிகழ்ச்சிகளும் உண்டு. விலை சற்று அதிகம்.

**பக்கங்கள் 86. விலை 1—4—0.**

## அவள்.

(ஆசிரியர்: மீ. சு. இளமுருகு பொற்செல்வி. வெளியிட்டோர்: காதலர் பண்ணை, பெரியகுளம், மதுரை மாவட்டம்.)

தாசி குலத்தில் பிறந்து, சூழ்நிலையின் காரணமாக விபசாரம் செய்தாலும், ஒரு வாலிபனை நெஞ்சாரக் காதலித்து, அவனுக்காகக் கனிந்துருகியும் எண்ணம் நிறைவேருமல், தற்கொலை செய்துகொண்ட ஒரு அபலையின் கதை. அமைப்பும், கருத்தும் நன்று. நளினமான தமிழ் நடை சுவைத்தற்கேற்றது. சித்திரங்களும் உண்டு.

**பக்கங்கள் 30. விலை 0—8—0.**

## கருணாநிதியார்.

(ஆசிரியர்: மீ. சு. இளமுருகு பொற்செல்வி. வெளியிட்டோர்: காதலர் பண்ணை, பெரியகுளம்.)

திராவிட முன்னேற்றக் கழகத்தின், பேச்சு—எழுத்து முன்னணி வீரர்களில் ஒருவராகிய தோழர். மு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கை வரலாறு. தெளிவாகவும், சுருக்கமாகவும் தொகுக்கப்பட்டுளது. குழந்தைக் கருணாநிதி முதல், திரைப்பட வசனாசிரியர் வரை பல, படங்கள் இடம் பெற்றுள்ளன. தோழர். கருணாநிதியைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ள விரும்புகிறவர்க்கு இப்புத்தகம் நல்ல துணை.

**பக்கங்கள் 52. விலை 1—0—0.**

## பசி.

(ஆசிரியர்: இராதாமணாளன். வெளியிட்டோர்; கலையகம், 14 ஏ, குப்பையர் தெரு, சென்னை—1.)

வீரபாண்டியக் கட்டமொம்மன் வரலாற்றோடு, இரண்டொரு கற்பனைப் பாத்திரங்களைச்சேர்த்து எழுப்பிய சரித்திரப் புதினம். வரலாற்றுத் துளிகளின்மேல், இலட்சியக் கோட்டைகள் பலவற்றை எழுப்பமுடியும் என்பதை,தோழர். இராதாமணாளன் மெய்ப்பிக்கிருர். வடநாட்டு சரித்திர நாவலாசிரியர்கள், பங்கிம் சந்திரர், முன்ஷி போன்ருரின் படைப்புப்பாணியிலே பசி எழுச்சி தரும் ஒரு நல்ல புத்தகம். அழகான பதிப்பு.

**பக்கங்கள் 96. விலை 1—0—0.**

## மாஸ்கோவில் சர்ச்சில்.

(ஆசிரியர்: வழிப்போக்கன். வெளியிட்டோர்: பாரதி நியூஸ் ஏஜன்சி, வெண்கலக் கடைதெரு, மதுரை.)

சர்ச்சில்—ஸ்டாலின், கொள்கை அளவில் இரண்டு எதிர்முனைத் துருவங்கள். போர்க்காலத்திலே மாஸ்கோவில்இவர்கள் சந்தித்ததுபற்றிய எழுத்தோவியம். "வழிப்போக்கன்" நடையிலே நகைச்சுவையும், கருத்தும் கலந்து மின்னுகின்றன. இது ஒரு புது முறைப் புத்தகம்.

**பக்கங்கள் 32 விலை 0—6—0.**

## தமிழ்ச்சித்தன்.

(ஆசிரியர்: ஆர். ரங்கநாதன், 1-ராஜரத்தினம்தெரு, சென்னை-10.)

தமிழில் ஒரு மருத்துவ ஆராய்ச்சி மாதஇதழ். காய்கறி, உணவு,நோய், மருந்து முதலியனபற்றிய குறிப்புகளும், சித்தவைத்தியம், சித்தர் முறை பற்றிய கட்டுரைகளும் கொண்டது. 20 பக்கங்கள், 0—4—0 என்பது விலை சற்று அதிகமெனினும், அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகையாக இருக்கிறது. வரவேற்கிறோம்.

**ஆண்டுக் கட்டணம் ரூ. 3—0—0**


# பகுத்தறிவு.

அறிவியல் திங்கள் வெளியீடு.

**கையொப்பக் கட்டணம்.**

உள் நாடு

| | |
|---|---|
| ஆண்டுக்கு | 2—4—0 |
| தனி இதழ் | 0—3—0 |

வெளி நாடு

| | |
|---|---|
| ஆண்டுக்கு | 3—0—0 |
| தனி இதழ் | 0—4—0 |

1. கட்டணத் தொகையை முன் பணமாகப் பணவிடைசெய்ய வேண்டும்.
2. தொகை செலுத்திய மாதம் முதலாக இதழ்கள் அனுப்பப் பெறும்.

**விளம்பரக் கட்டணம்.**

| | |
|---|---|
| ஒரு முழுப்பக்கம் | 40—0—0 |
| அரைப் பக்கம் | 25—0—0 |
| கால் பக்கம் | 15—0—0 |
| மேலட்டை | 60—0—0 |
| உள்ளட்டை | 50—0—0 |

**எழுத்தாளர்க்கு.**

நல்ல அறிவியல் கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் ஏற்றுக்கொள்ளப்படும். வெளியிடாதவைத் திருப்பியனுப்பவோ, கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவோ இயலாது.

★

பகுத்தறிவு அலுவலகம்,
சலகண்டபுரம் :: சேலம் மாவட்டம்.



KUYIL INK FOR FOUNTAIN PENS

உங்கள் பேனுக்களையும், எழுத்துக்களையும் சிறப்பிப்பது

# குயில் இங்க்

அரசாங்கத்திற்கும், லோக்கல் போர்டுகளுக்கும் சப்ளை செய்பவர்கள்.

சேலம் கெமிக்கல் இண்டஸ்டிரியஸ். சேலம்.



15-8-51 ல் வெளிவருகிறது!

# "தராசு"

(தன்மானத் தமிழ் மாத இதழ்)

ஆசிரியர்:
S. M. அரசு.

இணை ஆசிரியர்:
புரட்சிப் பித்தன்.

| | |
|---|---|
| தனி இதழ் | 0—2—0 |
| ஆண்டுக்கு ரூ. | 1—8—0 |

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

"தராசு" அலுவலகம்,
364, மிஷின்ஹில்,
குன்னூர் R. S., (நீலகிரி.)

Regd. No. M. 5721. PAHUTHARIVU.

ஆகஸ்டு 15-உ முதல் தமிழ் நாடெங்கும் மகத்தான ஆரம்பம்!




Edited, Printed & Published by, P. KANNAN, at Senthamizh Printing Works,
Jalakantapuram, Salem Dt. (S. India)